வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk
மலர் : 03
05.05.2022 வியாழக்கிழமை
இதழ் : 150
பக்கங்கள் : 16






# அழுத்தங்களுக்கு பணிந்து ஒருபோதும் பதவி விலகேன்!

## பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ திட்டவட்டம்

கொழும்பு, மே 05

"அழுத்தங்களுக்கு அடிபணிந்து நான் பதவி விலகப் போவதில்லை. பாராளு மன்றில் பெரும்பான்மை பலத்தை உறுதிப்படுத்தும் தரப்பினரிடம் ஆட்சி அதி காரத்தை ஒப்படைக்க தயாராக இருக்கிறேன்" இவ்வாறு தெரிவித்துள் ளார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ. 15

# பிரதி சபாநாயகர் பதவி; இன்று பலப்பரீட்சை!

கொழும்பு, மே 05

பொருளாதார நெருக்கடியால் அரசியலிலும் பெரும் நெருக்கடி எழுந்துள்ள நிலையில், பிரதி சபாநாயகரை தெரிவு செய்வதற்காக இன்று வாக்களிப்பு நடைபெற வுள்ளது.

பிரதி சபாநாயகர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தனது பதவியை இராஜினாமா செய்துகொண்டார். அதனை, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஏற்றுள்ளார் என்று நேற்று சபையில் அறிவித்தார்.

இந்நிலையிலேயே பிரதி சபாநாயகர் தெரிவுக் 15

# அனைத்து தரப்பினரும் நிதானமாக இருங்கள்!

## அமெரிக்கா மீண்டும் வலியுறுத்து

கொழும்பு, மே 05

இலங்கையில் அதிக மான போராட்டங்கள் மற்றும் கைதுகள் அதி கரித்துள்ளன. இந்நிலை யில், அனைத்துத் தரப் பினரும் நிதானமாக இருக்க வேண்டும் என்று இலங்கைக்கான அமெ ரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

அத்துடன், கைதுக்கு அஞ்சாமல் அமைதியான முறையில் போராட் டத்தில் ஈடுபடும் சுதந்திரம் 15

# யாழில் வாள்வெட்டு; இருவர் படுகாயம்!

யாழ்ப்பாணம், மே 05

நல்லூர் - கல்வியங்காட்டில் நேற்றிரவு இடம்பெற்ற வாள்வெட்டு தாக்குதலில் இருவர் படுகாயமடைந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப் பட்டனர்.

கல்வியங்காடு சட்டநாதர் சிவன் கோவிலுக்கு அண்மையாக நேற்று மாலை 6.40 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுது. 15



# பாராளுமன்று அருகே பதற்றம் 12 போராட்டக்காரர்கள் கைது!

கொழும்பு, மே. 05

பாராளுமன்ற நுழை வாயிலுக்கு அருகே எதிர்ப் பில் ஈடுபட்டிருந்த இளை ஞர், யுவதிகள் சிலர் நேற்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

10 ஆண்களும் 2 பெண்களும் இவ்வாறு கைது செய்யப்பட்டுள் ளனர்.

தன்னெழுச்சி போராட்டத்தில் ஈடுபட்ட இளை 15

# ஜனாதிபதி, பிரதமர் பதவி விலகவேண்டும்!

## சஜித் பிரேமதாஸ வலியுறுத்து

கொழும்பு, மே 05

"இந்த ஜனாதிபதி அல்லது பிரதமரின் கீழ் நாட்டைக் கட்டியெ ழுப்ப முடியாது. நாடு வெளிச்சத்துக்குப் பதி லாக இருளை நோக்கியே செல்கின்றது. எனவே, மக்களின் கோரிக்கைக்கு அமைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் உடனடி யாகப் பதவி விலக வேண்டும்." - இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ 15

# திடீர் காய்ச்சல் காரணமாக 11 மாத குழந்தை உயிரிழப்பு

## கொடிகாமத்தில் பரிதாபம்

யாழ்ப்பாணம், மே. 05

திடீர் காய்ச்சல் காரண மாக 11 மாதக் குழந்தை உயிரிழந்துள்ளது.

கொடிகாமம் தவசிக் குளத்தைச் சேர்ந்த சாந்த குமார் விஸ்வந் என்ற ஆண் குழந்தையே உயிரி ழந்துள்ளது

நேற்று முன்தினம் காலை குழந்தைக்கு காய்ச் சல் இருந்தமையால் பன டோல் கொடுக்கப்பட் டுள்ளது. பிற்பகல் 2 மணிக்கு காய்ச்சல் கடு மையாக இருந்தமையால் குழந்தை மிருசுவில் பிர தேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டது.

மேலதிக சிகிச்சைக்கு யாழ். போதனா வைத்திய சாலைக்கு மாற்றப் பட்ட போது 15

# நாட்டின் வெளிநாட்டு கையிருப்பு 50 மில்லியன் டொலரிலும் குறைவு

## அதிர்ச்சித் தகவல் வெளியிட்டார் நிதி அமைச்சர்

கொழும்பு, மே. 05

இலங்கையின் வெளி நாட்டுக் கையிருப்பில் இருந்து தற்போது பயன் படுத்தக்கூடிய வெளி நாட்டு கையிருப்பு தொகை 50 மில்லியன் அமெரிக்க டொலர்களுக் கும் குறைவாகவே காணப்படுவதாக நிதி அமைச்சர் அலி சப்ரி பாராளுமன்றத்தில் தெரி வித்தார்.

வருமான வரியை அதிகரிப்பதற்கான புதிய வரவு-செலவுத் திட்டம் பாராளுமன்றத்தில் தாக் கல் செய்யப்படும் என்று அவர் குறிப்பிட்டார். 15



# மைனா கோ கம போராட்டம் நேற்றுடன் முடிவுக்கு வந்தது!

கொழும்பு, மே 05

பிரதமரின் வாசஸ்தல மான அலரி மாளிகை முன் பாக நடத்தப்பட்ட மைனா கோ கம போராட்டம் நேற் றுடன் முடிவுக்கு வந்தது. கோட்டை நீதிமன்றம் விதித்த தடை உத்தவைய டுத்தே இந்தப் போராட்டம் முடிவுறுத்தப்பட்ட தாக அறிவிக்கப்பட் டது. 15



**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

மலைபோல அடுக்கிவைக்கப்பட்ட கோப்புக்களுடன் ஊடகவிய லாளர் மாநாடு நடத்தி, அரசியல்வாதிகளின் ஊழல் பட்டியல் ஒன்றை மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க வெளியிட்டிருந்தார்.

ரஜினி நடித்த படம் ஒன்று வெளிவருவதற்கு முன்னர், அதற்கான விளம்பரங்களும் அறிவிப்புக்களும் எப்படியிருக்குமோ அதேபோல, மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தும் வகையில் ஏற்கனவே 'காத்திருங் கள், 3ஆம் திகதி அம்பலப்படுத்துகிறேன்' என்று அறிவிப்பு விடுத்திருந்த அநுரகுமார வெளியிட்ட தகவல்கள் மிகப்பெரிய அதிர்வலைகளை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அட இவ்வளவு தானா, என்றே கேட்க வைத்திருக்கின்றது.

நல்லாட்சி அரசாங்கத்தில் நடந்த மத்திய வங்கி மோசடி குறித்து தெரிவித்த அநுரகுமார, அந்த மோசடியில் அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபாலவுக்கும் பங்குண்டு என்று தெரிவித்திருந்தார்.

அவ்வாறு அவர் கூறியதைக் கேட்டபோதுதான், முன்னர் ஒரு தடவை மைத்திரியின் ஆட்சிக்காலத்தில் அவருக்கு மிக நெருக்கமான ஒருவர் தெரிவித்த தகவல் ஒன்று ஞாபகத்துக்கு வந்தது.

நல்லாட்சி அரசாங்கம் பதவிக்கு வந்து ஒரு சில வாரங்களிலேயே மத்திய வங்கியில் அந்த மோசடி நடந்தது. அப்போது பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவுக்கு தெரியாமல் இந்த மோசடி நடந் திருக்காது என்று பரவலாகக் கூறப்பட்டபோதிலும், ஜனாதிபதி மைத்திரி அதனை துளியளவுகூட நம்புவதற்குத் தயாராக இருக்கவில்லை.

நல்லாட்சியின் நூறு நாள் ஆட்சி முடிந்து, பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்றபோது, அந்தத் தேர்தலில் மைத்திரியின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதமர் வேட்பாளராக மஹிந்த களம் இறங்கியிருந்தார்.

அந்தத் தேர்தலில் மஹிந்த மீண்டும் வெற்றிபெற்று ஆட்சியமைக் கக்கூடிய நிலைமையே தேர்தலின் கடைசிக் கட்டத்தில் இருந்தது.

ஆனால், தேர்தல் பிரசாரத்தின் கடைசிக் கட்டத்தில், மஹிந்த வெற்றிபெறுவதை விரும்பாத மைத்திரி, ரணிலை எப்படியேனும் வெற்றிபெற வைக்கவேண்டும் என்று தனது ஆலோசகர்களுடன் மந்திராலோசனை நடத்தினார்.

அந்த ஆலோசனையைத் தொடர்ந்தே, தேர்தல் பிரசாரத்தின் கடைசிக் கூட்டத்தில் வைத்து மஹிந்த வெற்றிபெற்றாலும் அவர் பிரதமராவதை தான் அனுமதிக்கப்போவதில்லை என்று குண்டு ஒன்றை தூக்கிப் போட்டார் மைத்திரி.

இதனால், வென்றாலும் மஹிந்த பிரதமராக மாட்டார் என்று தெரிந்ததால், மஹிந்தவுக்கு வாக்களிக்கவிருந்தவர்கள் வாக்களிப்பில் ஆர்வம் காட்டவில்லை. மஹிந்தர் வெற்றி பெற்றபோதிலும் ஆட்சி யமைக்கக்கூடிய அளவுக்கு அவரால் வெற்றிபெற முடியவில்லை.

மஹிந்தவை பிரதமர் வேட்பாளராக மைத்திரியே களம் இறக்கி விட்டு, மைத்திரியே கடைசி நேரத்தில் அப்படியோர் அறிவிப்பை செய்தது, ரணிலை வெல்ல வைப்பதற்குத்தான் என்பது இரகசியமான தல்ல.

ரணில்மீது அவ்வளவு நம்பிக்கையும் அபிமானமும் வைத்திருந்த மைத்திரி, பின்னர் ஏன் ரணிலுடன் மோதல் நிலையை ஏற்படுத்தினார்? ஆடும் சிங்கமும்போல, இருவரும் ஏன் நடந்துகொண்டனர் என்று மைத்திரிக்கு நெருக்கமான அந்த பிரமுகரிடம் கேட்டபோது சொன் னார், நூறு நாள் ஆட்சியில் நடந்த மத்திய வங்கி மோசடி ரணிலுக்கு தெரிந்திருக்காது என்று நம்பிய மைத்திரி, பாராளுமன்ற தேர்தல் நடந்து முடிந்த பின்னரும் மத்திய வங்கியில் இரண்டாவது தடவை யாக மோசடிகள் நடைபெற்றதும், அதுவும் ரணிலுக்கு தெரியாமல் இருக்க சந்தர்ப்பம் இல்லை என்று நம்பியமையே ரணில்மீது கோபமடையக் காரணம் என்று அந்த பிரமுகர் விளக்கம் தந்தார்.

ஆக, மத்திய வங்கியில் நடந்த மோசடி ரணிலுக்கு தெரியாமல் நடக்கவில்லை என்று நம்பியபோதுதான், ரணில்மீது மைத்திரி கோபமடைகின்றார் என்றால், அந்த மோசடியில் மைத்திரிக்கும் தொடர்பு இருக்கும் என்று நம்பவதற்கு எந்த முகாந்திரமும் இருப்ப தாகத் தெரியவில்லை.

ஆனால், அநுரகுமார அவருக்கும் பங்கு கிடைத்தது என்கிறார். ஒருவர் ஊழல் செய்கிறார் என்று சொன்னால் மாத்திரம் போதுமான தல்ல, அதற்கான ஆதாரங்களை நம்பக்கூடியவாறு வெளியிட வேண்டும்.

யோஷித முப்பத்தியெட்டு இடங்களை வாங்கினார் என்றால், அதற்கு ஆதாரமாக அந்த முப்பத்தியெட்டு இடங்களினதும் காணி உறுதிகளை - அதன் பிரதிகளை வெளியிட்டிருக்கவேண்டும்.

அவருக்கு முப்பத்தியெட்டு இடங்கள் மாத்திரமே சொந்தமாக இருக்கும் என்று இந்த ஊர்க்குருவி நம்பப்போவதில்லை. அதைவிட அதிகமும் இருக்கலாம். ஆனால், அவை அவரின் பெயரில் நிச்சயம் இருக்காது. ஆக, அவர் தனது பினாமிகளின் பெயரில் வைத்திருந் தால், அதனை அவருடையது என்று எந்த அநுரவாலும் நிரூபிக்க முடியாது.

ஆனால், அவ்வாறு வாங்கியிருப்பவர் அதனை எப்படி வாங்கினார், அவருக்கு அந்த பணம் எப்படி வந்தது என்பதை அவர் நிரூபிக்கும் வகையில் அவரை கேள்விக்கு உட்படுத்துவதை விடுத்து, வெறும் கோப்புக்களுடன் பொதுவெளிக்கு வருவது, வளர்ந்துவரும் ஓர் அரசியல் தலைவருக்கு அழகானதல்ல.

சஜித் 300 கோடி ரூபாய் ஊழல் செய்தார் என்பதும் பொறுப்பு டன் வெளியிடப்பட்ட தகவலாக தெரியவில்லை. இன்றைய சூழலில் இனிவரும் தேர்தல் எதுவானாலும் அதில் தனது கட்சிக்குப் போட்டியாக வரக்கூடியவர் என்ற நிலையில் உள்ள ஒருவர் பற்றிய ஊழல் புகார்களை முன்வைக்கின்றபோது, தகுந்த ஆதாரங்களுடன் வெளியிட்டிருக்கவேண்டும்.

மிகுந்த பரபரப்போடு எதிர்பார்க்கப்பட்ட ரஜினியின் படம் ஒன்று படுதோல்விப்படமாக போனதுபோலவே இருக்கின்றது அநுரகுமாரவின் ஊழல் பட்டியல்!

ஊழல்வாதிகள் தப்பித்தார்கள்!

- ஊர்க்குருவி

# அரசுக்கு எதிரான போராட்டம் வடக்கு கடற்றொழிலாளர் ஆதரவு!

யாழ்ப்பாணம், மே 05

அரசாங்கத்தை வீட் டுக்கு செல்லுமாறு கூறி காலிமுகத்திடலில் முன் னெடுக்கப்பட்டுவரும் போராட்டத்துக்கு வடக்கு மாகாண கடற் றொழிலாளர் இணையம் ஆதரவு வழங்குவதாக தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத் தின் இணைப்பாளர் அன்ரனி ஜேசுதாசன் தெரிவித்தார்.

வட மாகாண கடற்தொழி லாளர் இணையமும் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக் கமும் ஒன்றிணைந்து நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போது நாட்டில் ஜனா திபதி மற்றும் அரசாங்கத்துக்கு எதிராக முன்னெடுக்கப்படும் போராட்டத்துக்கு வடக்கு மாகாண கடற்தொழிலாளர் இணையம், தனது ஆதரவை தெரிவித்துள்ளது.

அத்துடன், வட பகுதியில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுடைய உரிமைகளுக்காக தொடர்ச்சியாக குரல் கொடுக் கும். வடக்கு, கிழக்குப் பகுதிக ளில் அரசாங்கம் திட்டமிட்ட வகையில் காணி சுவீகரிப்பு வேலைத்திட்டங்களை முன் னெடுத்து வருகின்றது. அதனை தடுத்து நிறுத்த வேண்டும்.

தற்போது எரிபொருள் விலையேற்றம் காரணமாக மீன வர்கள் கடும் பிரச்னைகளை எதிர்நோக்கி வருகின்றார்கள் எனவே அதற்குத் தகுந்த தீர் வைப் பெற்றுத் தர வேண்டும்.

தமிழ்நாட்டு அரசாங்கம் இந்திய இந்திய இழுவை மடி தொழிலாளர்கள் இலங்கை கடற் பரப்புக்குள் நுழையாமல் இருப் பதற்கான ஒரு தீர்மானத்தை அங்குள்ள சட்டமன்றத்தில் எடுக்க வேண்டும். தற்போது நாடு பூராகவும் இளைஞர்களால் முன்னெடுக் கப்பட்டு வரும் போராட்டம் வெற்றி பெற்று ஓர் ஆட்சி மாற்றம் ஏற்பட் டால், தற்போது அரசாங்கத் தில் பாராளுமன்றத்தில் உள் ளோர் யாரும் மீண்டும் அமை யவுள்ள அரசாங்கத்தில் உள்வாங் கப்பட கூடாது. புத்தி ஜீவிகள் மற்றும் சமூக நலன் சார்ந்தோர் மாத்திரம் எதிர்வரும் அரசாங் கத்தில் உள்வாங்கப்பட வேண் டும். அத்துடன், எல்லா இனங் களாலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய சகல மத அடையாளத்தையும் பாதுகாக்கக் கூடிய ஓர் அரசியல் யாப்பு உருவாக்கப்பட வேண்டும் - என்றும் அவர் தெரிவித்தார்.

## மின்வெட்டு அறிவிப்பு

நாட்டில் நாளை 3 மணித்தியாலங்களும் 20 நிமிடங்களும் மின் வெட்டு அமுல்படுத்தப் படவுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழு தெரி வித்துள்ளது.

இதற்கமைய, ஏ, பி, சி, டி, ஈ, ஜி, எச், ஐ, ஜே, கே, எல், பி, கியூ, ஆர், எஸ், ரி, யூ, வி, டபிள்யூ ஆகிய வலயங்களுக்கு காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரையிலான காலப் பகுதியில் 2 மணித்தியால மின் வெட்டு அமுல்படுத் தப்படவுள்ளது.

மேலும், மாலை 5 மணி முதல் இரவு 9 மணி வரையிலான காலப்பகுதி யில் ஒரு மணித்தியால மும் 20 நிமிடங்களும் மின் வெட்டு அமுல் படுத்தப்படவுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலை வர் தெரிவித்தார்.

இதேவேளை சிசி பகுதிக ளுக்கு காலை 6 மணி முதல் மாலை 9 மணி வரையிலான காலப் பகு தியில் 3 மணித் தியால மின் வெட்டு அமுல்படுத் தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

## அருளாசி உரையும் வேதபாராயணமும்

யாழ்ப்பாணம், மே 05

உலகெங்கிலும் வாழும் மக்கள் அனைவரும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்தும் நோய் நொடிகளிலிருந்தும் மீண்டு, சுபீட்சமான வாழ்வு வாழ வேண்டி, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத் தின் வேண்டுகோளுக்கு அமைவாக இறை ஆசி வேண்டி பிரார்த்தனைகள் நடக்கின்றன.

இதன் ஓர் அங்கமாக நாளை வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் வல் வெட்டி வேவில் வீரகத்தி விக்னேஸ்வர சுவாமி தேவஸ்தான பிரதம குருக்கள் சிவஸ்ரீ தி. விக் னேஸ்வரக் குருக்கள் பாலசஜீவ குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறும்.

இந்த நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடி யாக ஒலிபரப்பாகும். (ஐ)

## தமிழ் உணர்வாளர் அமைப்பின் தலைவரின் வழக்கு ஒத்திவைப்பு

மட்டக்களப்பு, மே 05

பயங்கரவாத தடைச் சட்டத் தின் கீழ் கைது செய்யப்பட்ட தமிழ் உணர்வாளர் அமைப்பின் தலைவர் கணபதிப்பிள்ளை மோகனின் வழக்கு எதிர்வரும் 11ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

கடந்த ஆண்டு மே 2ஆம் திகதி ஏறாவூர் பொலிஸாரால் விசாரணைக்கு அழைக்கப் பட்டு பயங்கரவாத தடைச் சட் டத்தின் கீழ் கடந்த ஆண்டு 5ஆம் திகதி இவர் கைது செய் யப்பட்டார்.

இந்த வழக்கு ஏறாவூர் சுற்றுலா நீதிவான் நீதிமன்ற நீதிபதி எஸ். அன்வர் சஜாக் முன்னிலையில் வழக்கு நேற்று எடுத்து கொள்ளப்பட்ட வேளை நீதிவான் இந்த உத்த ரவை பிறப்பித்தார்.

ஒரு வருடத்தின் பின் இவர் இன்று நீதிமன்றுக்கு அழைத்து வரப்பட்ட அதேவேளை மட்டக் களப்பு மாவட்டத்தில் பயங்கர வாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் விடு விக்கட்டிருந்த நிலையில் இவர் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



## 123 மில்லியன் ரூபாய் பெறுமதியான கஞ்சா யாழ். கடற்பரப்பில் சிக்கியது!

### சந்தேக நபர் கைது

யாழ்ப்பாணம், மே. 05

யாழ்.கடற்பரப்பில் நேற்று புதன்கிழமை அதிகாலை 123 மில்லியன் ரூபாய் பெறுமதி யான சுமார் 492 கிலோ கிராம் கேரளா கஞ்சாவை கடற்படை யினர் கைப்பற்றியுள்ளதுடன், சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

யாழ்.கடற்பகுதியில் கடற் படையினர் சுற்றுக்காவல் நட வடிக்கையில் ஈடுபட்டிருந்த போது, சந்தேகத்திற்கு இடமான முறையில் பயணித்த படகொன்றை வழிமறித்து சோதனையிட்டனர்.

இதன்போது படகில் 15 சாக்குகளில் 225 பொதிகளில் சுமார் 492 கிலோ கிராம் கேரளா கஞ்சாவினை மீட்டுள் ளனர். அதனை அடுத்து பட கோட்டியான யாழ்ப்பாணத் தைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞனையும்கைது செய்தனர்.

மீட்கப்பட்ட கஞ்சா மற் றும் படகினையும், கைது செய் யப்பட்ட இளைஞனையும் சட்ட நடவடிக்கைக்காக பொலி ஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

பொலிஸார் மேலதிக விசார ணைகளை முன்னெடுத்துள்ளது டன், சந்தேகநபரையும் சான்று பொருட்களையும் நீதிமன்றில் பாரப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (அ)

ஈழநாடு
Eelanadu
05.05.2022 வியாழக்கிழமை
பிலவ வருடம், சித்திரை 22

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# வீரியமடையாத போராட்டம்?

காலிமுகத்திடலில் இளைஞர்கள் தொடர்ந்தும் ஒன்றுகூடி வருகின்றனர். ஜனாதிபதி மற்றும் பிரதமர் வெளியேற வேண்டும் என்பதே, அவர்களின் பிரதான கோரிக்கையாக இருக்கின்றது. ஆனால், இன்றுவரையில் அவர்களின் கோரிக்கை நிறைவேறவில்லை. அதேவேளை தொழில் சங்கங்களும் எதிர்ப்புக்களை வெளியிட்டு வருகின்றன. இந்தப் போராட்டங்களை ராஜபக்ஷக்கள் பெரிதாக பொருட்படுத்தவில்லையா அல்லது, ஒரு கட்டத்துடன் இவர்கள் உற்சாகமிழந்து, தாங்களாகவே கலைந்து விடுவார்களென்று ஆட்சியாளர்கள் கருதுகின்றனரா?

இலங்கையின் அரசியல் வரலாற்றில் மக்கள் எழுச்சியால் அகற்றப்பட்ட ஆட்சியாளர்கள் இல்லை. அரசியல் கட்சிகளின், கட்சி தாவல்களால், அரசியல் கூட்டணிக்குள் ஏற்படும் பிளவுகளால், அரசாங்கங்கள் வீழ்சியடைந்திருக்கின்றன. ஒருவேளை, சிங்கள இளைஞர்களின் எழுச்சியால் ஜனாதிபதி பதவி விலகுவாராக இருந்தால் இலங்கையின் வரலாற்றில் இது பதிவாகும். ஆனால், அவ்வாறானதொரு வரலாறு உருவாகிவிடக் கூடாதென்பதில் ராஜபக்ஷக்கள் உஷாராக இருக்கின்றனரா?

இலங்கையின் அரசியல் வரலாற்றில் இரண்டு ஆயுத கிளர்ச்சிகளை நாடு கண்டிருக்கின்றது. ஒன்று, தென்னிலங்கையில் ஏற்பட்ட ஜே. வி. பி. இளைஞர் ஆயுத கிளர்ச்சி. மற்றையது, தமிழ் இளைஞர்களின் ஆயுதக் கிளர்ச்சி. இந்த இரண்டு கிளர்ச்சிகளும் அந்நிய ஆதரவோடு முற்றிலுமாக அழிக்கப்பட்டன. ஜே. வி. பியின் கிளர்ச்சியை அடக்குவதற்கு, இந்தியா உதவியளித்தது.

ஆனால், அதே இந்தியாவே, தமிழ் இளைஞர்களின் ஆயுத கிளர்ச்சிக்கு ஒரு கட்டம் வரைக்கும் ஆதரவும் உதவியும் வழங்கி ஊக்குவித்தது. தமிழ் இளைஞர்களின் ஆயுத கிளர்ச்சி, விடுதலைப் புலிகளின் தலைமையில், ஒரு மரபுவழி இராணுவமாக பரிணமித்தபோது, ஒட்டுமொத்த உலக ஆதரவுடனும் புலிகளை அழிப்பதில் ராஜபக்ஷக்கள் வெற்றிபெற்றனர். அந்த ராஜபக்ஷக்களை வெளியேறுமாறு கோரியே, தற்போது சிங்கள இளைஞர்கள் வீதிக்கு வந்திருக்கின்றனர்.

ராஜபக்ஷக்களுக்கு எதிராக தற்போது ஏற்பட்டிருக்கும் சிங்கள இளைஞர்களின் எழுச்சியை எவரதின் ஆதரவுடனும் அடக்க முடியாது. ஏனெனில், இது முற்றிலும் மாறுபட்ட மக்கள் கிளர்ச்சியாகும். ஜனநாயக நெறிமுறைகளைத் தழுவியதாகவும், புத்தாக்கம் மிக்கதாகவும் முன்னெடுக்கப்படும், இந்தக் கிளர்ச்சிக்கு வெளியார் ஆதரவு வழங்காவிட்டாலும்கூட, அதனை நசிப்பதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அவர்களுக்கு போராடுவதற்கு உரிமையுண்டு - என அமெரிக்க தூதரகம் குறிப்பிட்டிருப்பதை இந்த இடத்தில் நாம் குறித்துக் கொள்ள வேண்டும்.

ஆனாலும், சிங்கள இளைஞர்களின் கிளர்ச்சி, வீரியமான போராட்டமாக இன்னும் உருவெடுக்கவில்லை. இந்த நிலையிலேயே, ஆட்சியாளர்களும், இதனைக் கண்டு அச்சம் கொள்ளாத நிலைமை காணப்படுகின்றது. போராட்டம் வீரியமிக்கதாக எழுச்சியுற்றால் மட்டுமே, அதன் தாக்கத்தை தென்னிலங்கை உணரும். இல்லாவிட்டால், இது வெறுமனே, அதிருப்தியாளர்களின் எதிர்ப்பாக மட்டுமே சுருங்கிப் போகும். இதனை எதிர்கொள்வதற்கு, ஆட்சியாளர்கள், அதிகாரத்தைப் பிரயோகிப்பார்களாக இருப்பின், நிலைமை தலைகீழாகலாம். எனினும் இதுவரையில், இளைஞர்கள் பொது மக்களுக்கு இடையூறில்லாமல், தங்களின் எதிர்ப்புக்களை வெளியிட்டு வருவதால், ஆட்சியாளர்களாலும் எதனையும் செய்ய முடியாத நிலைமை காணப்படுகின்றது.

ஆனால், இலங்கை இதுவரை காணாத வரலாற்று நெருக்கடி, அரசியல் நெருக்கடிகளை தோற்றுவித்திருக்கின்ற நிலையில், பொருளாதார நெருக்கடியை தீர்க்க முடியாத அரசாங்கத்தால், அரசியல் நெருக்கடியையும் தீர்க்க முடியாது. அரசியல் நெருக்கடியை தீர்க்க முடியாமல் போகும்போது, சிங்கள, இளைஞர்களின் எழுச்சியையும் ஓர் எல்லைக்கு மேல் கட்டுப்படுத்த முடியாது. ஆனால், அதன் வீரியத்தை ஓர்எல்லைக்குள் வைத்துக் கொள்ளும் உபாயங்கள் தொடர்பில் ஆட்சியாளர்கள் சிந்திக்கக்கூடும்.



# ஜே. வி. பி. வெளிப்படுத்திய பண மோசடிகள்!

**அலசுவது இராஜதந்திரி**

அரச தரப்பினர் மட்டுமல்ல. எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ கூட பண மோசடி நடவடிக்கையில் சம்பந்தப்பட்டவராக இருக்கின்றார் என்ற தகவலை மக்கள் விடுதலை முன்னணி (ஜே. வி .பி.) தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுர குமார திஸநாயக்க விலாவாரியாக ஆவணங்கள் அடிப்படையிலான ஆதாரங்களுடன் வெளிப்படுத்தியுள்ளார்.

இலங்கையில் ஆட்சிக்கு வருவோர் பெருமளவிலான மோசடிகளோடு சம்பந்தப்பட்டவர்களாக எப்போதும் இருப்பதையே அறிய முடியும். குறிப்பாக, இலங்கையில் நிறைவேற்று அதிகார ஆட்சிமுறை மற்றும் திறந்த பொருளாதார நடவடிக்கைகள் என்பவை அறிமுகமானதையடுத்தே ஊழல், மோசடிகள் என்பவை மிகமோசமான முறையில் இடம்பெற ஆரம்பித்திருந்தன.

இதுதவிர, முப்பது வருட கால யுத்தமும் மோசடிக்கும்பல்களுக்கு வழியமைத்திருந்தது. இராணுவத்துக்கு சப்பாத்துகள் வழங்கியோர் முதல் ஆயுதக் கொள்வனவை மேற்கொண்டோர் வரை ஏராளமானோர் பெருவாரியான முறையில் பணத்தை பல்வேறு வழிகளிலும் சம்பாதித்திருந்தனர்.

இத்தகைய தருணத்திலேயே தென்னிலங்கையிலும் வடக்கு - கிழக்கிலும் இலங்கை சுதந்திரமடைந்தவேளை இருந்த அரசியல்வாதிகள் எவ்வளவு தூரம் அப்பழுக்கற்றவர்களாக இருந்தார்கள் என்பதற்கு முன்னாள் பிரதம மந்திரிகளான டபிள்யூ. தகநாயக்க, டட்லி சேனநாயக்க ஆகியோர் நல்ல உதாரண புருஷர்களாக இருந்துள்ளமையை அறிய முடியும்.

அத்துடன், தமிழ் அரசியல்வாதிகளிடையேகூட நேர்மையானவர்கள் இருந்ததோடு அவர்களில் தமிழ் அரசுக் கட்சி தலைவர் காலஞ்சென்ற எஸ். ஜே. வி. செல்வநாயகம் வியந்து குறிப்பிடத்தக்கவராக இருக்கின்றார்.

கொழும்பிலிருந்து ரயிலில் தெல்லிப்பழையில் வந்திறங்கியதும் தமது இல்லம் வரை தாமாகவே தமது பயணப்பெட்டியை சுமந்து செல்பவராக எஸ். ஜே. வி. செல்வநாயகம் இருந்தார். எவராவது அவரின் பயணப் பெட்டியை சுமந்து உதவிசெய்ய முன்வந்தால் அதனை நன்றியுணர்வோடு தந்தை செல்வா தவிர்த்திருந்தார்.

இதுதவிர, தாம் ஆஜராகும் வழக்குகளுக்குக்கூட மிக நாணயமான முறையிலேயே கட்டணங்களை அவர் எடுத்திருந்தார். தென்னிலங்கையின் பிரபலம் மிக்க அரசியல்வாதியாக இருந்த மறைந்த பிரதமர் டட்லி சேனநாயக்க மகவும் எளிமையான வாழ்க்கை வாழ்ந்தவர். அவர் இறந்த போது அவரின் சட்டைப்பையில் ஓரிரு தாள் காசுகள் மட்டுமே இருந்தன. அத்துடன், வீண் ஆடம்பரங்களை தவிர்த்திருந்தார் கேம்பிறிட்ஜ் பட்டதாரியான டட்லி சேனநாயக்க.


டட்லி சேனநாயக்கவைப் போலவே பிரதமராக இருந்த டபிள்யூ. தகநாயக்காவும் சிக்கனம் மிக்க ஒரு தலைவராக அலரி மாளிகையில் வாழ்ந்திருந்ததோடு தமது பதவிக்காலம் முடிவுற்று அலரி மாளிகையிலிருந்து வெளியேறியபோது ஒரு பயணப்பையோடு மட்டும் ஒரு சாதாரண குடிமகனாக அங்கிருந்து வெளியேறியிருந்தார்.

அத்தகைய தலைவர்கள் நாட்டை நிர்வகித்தபோது இன்றிருப்பது போல பொருளாதார நிலவரம் மோசமான கட்டத்தை எட்டியிருக்கவில்லை. சிறிதளவு ஊதியம் பெற்றபோதிலும் பல பிள்ளைகளோடு கூட்டுக் குடும்ப வாழ்க்கை வாழ்ந்த அன்றைய காலத்து இலங்கையர்கள் செலவுகள் தவிர சேமிப்புகளையும் மேற்கொண்டிருந்தனர்.

ஆட்சி அதிகாரங்களில் இருந்தோர் மட்டுமல்ல. அரச நிர்வாக துறைகளில் இருந்த அதிகாரிகள்கூட நேர்மையாளர்களாகவும், கண்ணியமானவர்களாகவும் வாழ்ந்திருந்தனர். ஆனால், இன்று அனைத்துமே தலைகீழாக மாற்றமடைந்து லஞ்சம் , ஊழல் , மோசடி என்பவை எங்கும், எதிலும் தலைவிரித்தாடுகின்றன.

இதுதவிர, முதலீடுகள் மற்றும் வர்த்தக கைத்தொழில் நடவடிக்கைகள் என்ற போர்வையில் அரச தரப்பினர் மேற்கொள்கின்ற மோசடிகள் ரூபாய்களிலல்ல. அமெரிக்க டொலர்களாக மத்திய வங்கியையே சுரண்டுமளவுக்கு கோடிக்கணக்கில் ஆட்சியதிகாரங்களில் இருப்போராலும் அவர்கள் சார்ந்தோராலும் மேற்கொள்ளப்பட்டுள்ளமையை அவதானிக்க முடிகின்றது

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



மே - 05 வியாழக்கிழமை
சுபகிருது வருடம் - சித்திரை 22
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 1.30 - 3.00
திதி : பஞ்சமி



## இன்றைய ராசிபலன்

**மேடம்** எதிர்பார்த்த செயலில் நன்மையை காண்பீர்கள். குடும்பத்தில் வீண் செலவுகள் ஏற்படும். மனம் சஞ்சலப்படும். மனதில் புதிய நம்பிக்கை உருவா கும். துணிச்சலுடன் செயல்படுவீர்கள்.

**இடபம்** வழக்கமான செயல்களில் சில தடைகள் உண்டாகி பின்னர் சரியாகும். இன்றுவரை குழப்பம் நீடிக்கும் அதன் பிறகு தெளிவு காண்பீர்கள். உறுதியால் நீங்கள் நினைத்தது நிறைவேறும்.

**மிதுனம்** வரவை விட செலவு அதிகரிக்கும். நிதானம் தேவை. குடும்பத்தில் எதிர்பாராத செலவு ஏற்பட்டாலும் மகிழ்ச்சியான நாள். சில செயல்களை திட்டமிடாததால் நெருக்கடிக்கு ஆளாவீர்கள்.

**கடகம்** உங்கள் குடும்பத்திற்கு நண்பர் ஒருவர் வழியே நன்மை ஏற்படும். இன்று மாலை வரை உங்கள் முயற்சிகளில் லாபமிருக்கும். எதிர்பார்த்த பணம் கிடைப்பதால் மகிழ்ச்சி அடைவீர்கள்.

**சிம்மம்** நீங்கள் நினைத்த செயல் இன்று நிறை வேறும். புதிய தொழில் தொடங்குவதற்கான முயற்சி வெற்றி பெறும். கோபத்திற்கு இடம் கொடுக்காதீர்கள். அமைதி தேவை.

**கன்னி** உங்களுடைய புதிய முயற்சிக்கு வெற்றி உண்டாகும். சுபச்செலவுகளால் குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். புதிய நபர்களிடம் கூடுதல் விழிப்புணர்வு தேவை.

**துலாம்** இன்று மாலை வரை உங்கள் செயலில் நிதானம் தேவை. அலைச்சல் அதிகரிக்கும் அதனால் மன அழுத்தம் உண்டாகும். இழுபறியாக இருந்த வேலை இன்று மாலைக்குப்பின் முடிவுக்கு வரும்.

**விருட்சிகம்** உங்களுக்கு வேலைகளில் இருந்த நெருக்கடி குறையும். இன்று உங்கள் உழைப்பிற்குரிய பலனை கிடைத்து மகிழ்வீர்கள். நீங்கள் எதிர்பார்த்திருந்த தகவல் இன்று வந்து சேரும்.

**தனுசு** இறை அருளால் இன்று உங்கள் எண்ணம் நிறைவேறும். விட்டுப்போன செயல்களில் துணிச்சலாக ஈடுபடுவீர்கள். விட்டுப்போன வாய்ப்புகள் உங்களைத்தேடி வரும் நாள்.

**மகரம்** நேற்று ஏற்பட்ட தர்ம சங்கடத்தில் இருந்து மீளுவீர்கள். வியாபாரம், தொழில் பற்றிய சிந்தனை மேலோங்கும். குடும்பத்தில் ஒருவருக்கு நன்மை உண்டாகும். மகிழ்ச்சி கூடும் நாள்.

**கும்பம்** வெளியிடங்களில் உங்கள் செல்வாக்கு அதிகரிக்கும். தொழிலில் இருந்த தடைகள் விலகி முன்னேற்றம் உண்டாகும். முதலாளியிடம் பணிவாக செயல்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள்.

**மீனம்** உங்கள் பேச்சில் கனிவு உண்டாகும். பெரியோர்களின் ஆசி கிடைக்கும். இன்று நீங்கள் பிறரிடம் பேசும் வார்த்தைகளில் நிதானம் தேவை. மாலை வரையில் உங்கள் செயல்களில் இழுபறி நீடிக்கும்.

# இலங்கையில் அண்ணாமலைக்கு வரவேற்பு! அதிர்ச்சியில் ஸ்டாலினும் செல்ல திட்டம்?



சென்னை, மே 05

தமிழக பா.ஜ., தலைவர் கே. அண்ணாமலைக்கு, இலங்கை தமிழர்கள் அளித்த வரவேற்பு, தி.மு.க., வை அதிர்ச்சி அடைய வைத்துள்ளது என் றும் இதனால், இலங்கை செல்ல தமிழ்க முதல்வர் மு.க. ஸ்டாலின் திட்டமிட்டுள்ளதாக சென்னை தகவல்கள் தெரிவித்தன.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் நடத்திய மே தின நிகழ்ச்சியில் பங்கேற்க, ஏப்ரல் 30ஆம் தேதி, இலங்கை சென்ற அண்ணாமலை, அங்கு பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்றார். கொழும்பு விமான நிலையத்தில் இருந்து நுவரெலியா சென்ற அவர், தன் பயணத்தின் முதல் நிகழ்வாக, அங்குள்ள ஹனுமன், சீதா கோவிலுக்கு சென்று வழிபட்டார். இங்கு இராவணனால் சீதை சிறை வைக்கப்பட்டதாக, ஹிந்துக்கள் வழிபடும் அசோக வனத்தில் இருந்து, தன் பயணத்தை தொடங்கியிருந்தார்.

மலையக தமிழர்களால் நிர்வகிக்கப்படும், இந்த சீதா மாதா கோவிலில், பிரதமர் மோடி, மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா, பா.ஜ., தேசிய தலைவர் நட்டா ஆகியோரின் பெயரில் அர்ச்சனை செய்தார். மே 1-ம் தேதி நுவரெலியாவில், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் நடத்திய உழைப்பாளர் தின கொண்டாட்டத்தில், அண்ணாமலை பங்கேற்றார்.

இந்திய வம்சாவளியினரான, மலையக தமிழர்கள் திரண்டிருந்த கூட்டத்தில், அண்ணாமலையை அறிமுகப்படுத்திய, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் செந்தில் தொண்டைமான், "இந்திய பிரதமர் நரேந்திர மோடியால் அனுப்பப்பட்டு, அவரின் பிரதிநிதியாக அண்ணாமலை இங்கு வந்திருக்கிறார்" என்று அறிவித்தார். அப்போது, கைதட்டலால் அரங்கமே அதிர்ந்தது.

பின்னர், மாவை சேனாதிராஜா, சுமந்திரன், சிவஞானம், சித்தார்த்தன், செல்வம் அடைக்கல நாதன் உள்ளிட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு தலைவர்களுடன், மதிய உணவு சாப்பிட்டபடி, பல்வேறு விஷயங்கள் குறித்து நீண்ட நேரம் கலந்துரையாடினார்.

யாழ்ப்பாணம் சிறைக்கு சென்ற அண்ணாமலை, அங்குள்ள ராமேஸ்வரத்தை சேர்ந்த மீனவர்கள், 12 பேரை சந்தித்து பேசினார். அவர்களுக்கு உடைகள், உணவு பொருள்களை வழங்கினார். தொடர்ந்து, வடக்கு மாகாண முன்னாள் முதல்வர் விக்னேஸ்வரனை சந்தித்தார். ஐந்து நாள் இலங்கை பயணத்தில் மலையக தமிழர்கள், ஈழத் தமிழ் அமைப்புகள், கட்சிகளின் தலைவர்களையும் சந்தித்தார்.

இலங்கையில் பல்வேறு தரப்பிரை அண்ணாமலை சந்தித்திருப்பதும், தமிழ் அமைப்புகளும், மலையக, ஈழத் தமிழர்களும் அவருக்கு அளித்த வரவேற்பும், தி.மு.க.,வை அதிர்ச்சி அடைய வைத்துள்ளது.

"பா.ஜ.,வுக்கும், பிரதமர் மோடிக்கும் எதிராக, தமிழகத்தில் தாங்கள் கட்டமைத்துள்ள எதிர்ப்புணர்வை, அண்ணாமலையின் இலங்கை பயணம் உடைத்து விடும்" என, துரைமுருகன், டி.ஆர். பாலு, ஆ.ராசா போன்ற தி.மு.க., முக்கிய தலைவர்களும், கி.வீரமணி போன்றவர்களும், முதல்வர் ஸ்டாலினிடம் தெரிவித்துள்ளனர். பா.ஜ., திட்டத்தை முறியடிக்கும் வகையில், முதல்வர் ஸ்டாலின் இலங்கை செல்ல வேண்டும் என்று, அவருக்கு ஆலோசனை கூறியுள்ளதாக தெரிகிறது. இதனால் ஸ்டாலின் அல்லது முக்கிய திமுக தலைவர் ஒருவர் விரைவில் இலங்கை செல்லலாம் என்று திமுக வட்டாரங்கள் தெரிவித்தன.

# இலங்கை அகதிப்பெண் வீட்டிற்குள் இரவில் நுழைந்த பொலிஸ் அதிகாரி!

## பணியிலிருந்து இடைநீக்கம்!

சென்னை, மே 05

இலங்கை பெண் அகதி வீட்டிற்குள் இரவில் நுழைந்த பொலிஸ் அதிகாரி தற்காலிகமாக பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் தனுஸ்கோடி கடல் வழியாக தமிழகத்திற்கு படகில் அகதியாக வரும் இலங்கை தமிழர்கள் 80 பேர் மண்டபம் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் இலங்கையில் இருந்து மார்ச் 22 ஆம் திகதி வந்த ஒரு இளம்பெண் உட்பட 6 பேர் தனுஷ்கோடி வந்தனர். பொலிசாரின் விசாரணைக்கு பின், மண்டபம் அகதிகள் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். கணவரை பிரிந்த அப்பெண் குழந்தைகளுடன் தங்கியுள்ளார். அப்பெண்ணிடம் பழகி வந்த மண்டபம் பொலிஸ் அதிகாரி அன்பு, கடந்த 2 நாட்களுக்கு முன் நள்ளிரவு மது போதையில் வீட்டிற்குள் புகுந்து அப்பெண்ணிடம் தவறாக நடக்க முயன்றார்.

இது குறித்து அப்பெண் மற்றும் அப்போது முகாமில் பாதுகாப்பு பணியில் இருந்த பொலிசார் அளித்த புகாரின் அடிப்படையில் அன்புவிடம், விசாரணை நடாத்தினர். இந்த விசாரணை அறிக்கை படி மாவட்ட பொலிஸிற்கு பணியிட மாற்றம் செய்யப்பட்ட அன்புவை தற்காலிக பணியிடை நீக்கம் செய்து ராமநாதபுரம் மாவட்ட கண்காணிப்பாளர் கார்த்திக் உத்தரவிட்டார்.

பொருளாதார நெருக்கடியால் உணவின்றி அகதியாக தமிழம் வந்த இலங்கை தமிழ் பெண்ணிடம் மெரைன் காவலர் மது போதையில் தவறாக நடக்க முயன்ற சம்பவம் மண்டபம் அகதிகள் முகாமில் வசிக்கும் இலங்கை தமிழர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

# இலங்கை நிவாரண நிதிக்கு தி.மு.க. சார்பில் ஒரு கோடி ரூபா!

## முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, மே 05

"இலங்கை மக்களுக்கு நேசக்கரம் நீட்டும் விதமாக, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இலங்கை மக்களுக்கு உதவிட முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு ஒரு கோடி ரூபா (இந்திய) வழங்கப்படும்" என்று அக்கட்சியின் தலை வரும் தமிழக முதல்வருமான மு.க. ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், "எல்லைகளைக் கடந்து உலக மாந்தராகச் சிந்திப்பதுதான் தமிழர் பண்பு. பிறர் துன்பம் கண்டு முதலில் துடிக்கும் நெஞ்சம் தமிழர் நெஞ்சம். பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் என்னும் உயரிய அறத்தை ஒழுகி நடக்கும் நாகரிகம் நம் நாகரிகம்.

அந்த வகையில், கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கி அல்லலுறும் இலங்கை மக்களுக்கு உதவிட முதற்கட்டமாக 40 ஆயிரம் டன் அரிசி, 500 டன் பால் பவுடர் மற்றும் உயிர்காக்கும் மருந்துகளைத் தமிழக அரசின் சார்பில் ஒன்றிய அரசின் அனுமதியுடன் விரைவில் அனுப்பவுள்ளோம்.

மேலும், நெருக்கடியில் உள்ள இலங்கை மக்களுக்கு நேசக்கரம் நீட்டும் விதமாக, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இலங்கை மக்களுக்கு உதவிட முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு 1 கோடி ரூபா (இந்திய) வழங்கப்படும்.

இத்துடன், திராவிட முன்னேற்றக் கழகச் சட்டப்பேரவை உறுப்பினர்களின் ஒரு மாத ஊதியமும் முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு வழங்கப்படும் என்பதையும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் என்ற முறையில் அறிவிக்க விரும்புகிறேன்" என்று மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.



# இந்தியா செல்ல முயன்ற 12 பேர் மன்னார் கடற்பரப்பில் சிக்கினர்!

மன்னார், மே 05

மன்னாரில் இருந்து சட்ட விரோதமாக இந்தியாவுக்கு படகில் சென்ற மூன்று குடும்பங்களைச் சேர்ந்த 12 பேர் உள்ளடங்கலாக 14 பேரை தாழ்வுபாடு கடற்பரப்பில் வைத்து நேற்று புதன்கிழமை அதிகாலை கடற்படையினர் கைது செய்தனர்.

திருகோணமலையை 7 சிறுவர்கள் ,3 பெண்கள் ,2 ஆண்கள் உள்ளடங்கலாக 3 குடும்பங்களைச் சேர்ந்த 12 பேரும் மன்னாரை சேர்ந்த படகோட்டிகள் இருவரும் இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட 14 பேரும் நேற்று புதன்கிழமை அதிகாலை 5 மணியளவில் மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

மன்னார் பொலிஸார் இவர்களை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# ஜனாதிபதி கோட்டாவுக்கு எதிரான எந்த பிரேரணைக்கும் ஆதரவில்லை

## வாசுதேவ நாணயக்கார திட்டவட்டம்

கொழும்பு, மே. 05

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக முன் வைக்கப்படும் எந்தவொரு பிரேரணைக்கும் ஆதரவளிக்கப் போவதில்லை என முன்னாள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார அறிவித்துள்ளார்.

அத்தோடு ஜனாதிபதிக்கு எதிராக எதிர்க்கட்சிகள் முன் வைத்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை அர்த்தமற்றதாக இருக்கும் என்றும் அவர் கூறினார்.

கட்சிப் பிரதிநிதிகளுக்கு இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



இதேவேளை முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பிலவும் வாசுதேவ நாணயக்காரவின் கருத்தைப் போன்றே கருத்து வெளியிட்டார்.

முன்னதாக தனது அமைச்சு பதவியை இராஜினாமா செய்திருந்த வாசுதேவ நாணயக்கார, ஜனாதிபதியின் கீழ் எந்தவொரு அமைச்சு பதவியும் ஏற்கமாட்டேன் என தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 19ஆவது திருத்தச் சட்டத்தை உடன் அமுலாக்கவேண்டும்!

## சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை

கொழும்பு, மே. 05

நாட்டின் நெருக்கடி நிலைக்கு தீர்வு காண்பதற்காக 15 பேர் கொண்ட அனைத்துக் கட்சி அமைச்சரவையையும், அதற்கு ஆலோசனை வழங்குவதற்காக நிபுணர்கள் அடங்கிய ஆலோசனை சபை ஒன்றையும் நிறுவவேண்டுமென இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

தற்போதைய நெருக்கடிக்கு தீர்வைப் பெற்றுக் கொள்வதற்கான யோசனையை கண்டி மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்க தேரர்களிடம் முன்வைத்த பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டபோது சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சாலிய பீரிஸ் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

20 ஆம் திருத்தச் சட்டத்தை நீக்கி, 19 ஆம் திருத்தச் சட்டத்தை உடன் அமுலாக்க வேண்டும்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை, குறிப்பிட்ட காலத்திற்குள் நீக்கப்படவேண்டும்.

அவநம்பிக்கை பிரேரணை கொண்டுவரப்பட்டு, அது நிறைவேற்றப்பட்டாலும், நிறைவேற் றப்பட்டாவிட்டாலும், தேசிய அரசாங்கத்தை நிறுவி, குறைந்தபட்ச வேலைத்திட்டத்துடன் செயற்படல் வேண்டும் என்ற யோசனைகளை நாம் முன் வைத்துள்ளளோம்-என்றார். (அ)

# சுமந்திரனுக்கு எதிராக இ.தொ.கா. முறைப்பாடு!

## தமிழரசுக் கட்சி தலைமையிடம்

கொழும்பு, மே 05

**தமிழரசுக் கட்சிக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸூக்கும் அன்று தொட்டு இன்று வரை கட்சி வேறுபாடுகள் இருந்தாலும் நல்ல உறவு இருந்து வருகின்றது. அதைச் சீர்குலைக்கும் முகமாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் இ.தொ.கா. வை விமர்சித்துள்ளதாக பதுளை மாவட்ட முன் னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரி.வி. சென்னன் தெரிவித்தார்.**

இது சம்பந்தமாக தமிழரசுக் கட்சியின் தலைவர் சேனாதிராசாவின் கவனத்துக்கு கொண்டு வரப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

தமிழரசுக் கட்சியின் அமரர் அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த காலப் பகுதியில் அன்றைய ஆட்சியாளர்களான ஐக்கிய தேசிய கட்சியினரால் அமரர் அமிர்தலிங்கத்துக்கு எதிராக நம்பிக்



கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டது. இதன்போது அன்றிருந்த இ.தொ.கா. தலைவர் ஆமரர் சௌமிய மூர்த்தி தொண்டமான் எதிர்த்தே வாக்களித்தார்.

அப்படியான உறவுகள் இருந்த போதிலும் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் சின்னஞ்சிறு கட்சிகளின் பேச்சை கேட்டு இ.தொ.காவை விமர்சித்தது மிகவும் வேதனை அளிக்கின்றது. சுமந்திரனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாளுக்கு நாள் மக்களின் ஆதரவை இழந்தே வருகின்றது. இது சம்பந்தமாக தமிழரசுக் கட்சியின் தலைவர் சேனாதிராசாவின்கவனத்துக்கு கொண்டு வரப்படும்-என்றார். (அ)

# தொடர் வேலைநிறுத்தத்துக்கு தயாராகும் தொழிற்சங்கங்கள்

கொழும்பு, மே. 05

நாளை நாடு முழுவதும் நடைபெறவுள்ள முழுக் கடையடைப்பு மற்றும் 24 மணித்தியால கூட்டுப் பணிப்புறக்கணிப்புக்கும் உரிய பதில் கிடைக்காத பட்சத்தில் தொடர் வேலை நிறுத்தம் மற்றும் தொடர் கடையடைப்பை நடத்துவதற்கு தொழிற்சங்க ஒருங்கிணைப்பு நிலையம் தீர்மானித்துள்ளது.

அதன்படி எதிர்வரும் மே மாதம் 11ஆம் திகதி முதல் வேலை நிறுத்தப் போராட்டம் தொடரும் என தொழிற்சங்க ஒருங்கிணைப்பு நிலையத்தின் செயலாளர் ரவி குமுதேஷ் தெரிவித்தார்.

இதேவேளை, தற்போதைய அரசுக்கு எதிராக அமைதியான முறையில் போராட்டங்களில் ஈடுபடுபவர்களுக்கு இலவச பஸ்களை வழங்க இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.

20-25 கிலோமீற்றர் தூரத்தில் இவ்வாறான போக்குவரத்து சேவைகளை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

எவ்வாறாயினும், எந்தவொரு அரசியல் கட்சிக்கும் இவ்வாறான இலவச பஸ்கள் வழங்கப்படமாட்டாது எனவும் அவர் வலியுறுத்தினார். (அ)



# புவனலோஜினி நடராஜசிவம் காலமானார்

கொழும்பு, மே. 05

இலங்கையின் மூத்த அறிவிப்பாளர் புவனலோஜினி நடராஜசிவம் காலமானார்.

தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த அவர், நேற்று முன் தினம் காலமானார் என அவரது உறவினர்கள் தெரிவித்தனர்.

அவர் மறைந்த மூத்த அறிவிப்பாளர் நடராஜசிவத்தின் மனைவி என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# பிரதிச் சபாநாயகர் பதவிக்கு இம்தியாஸ்?



கொழும்பு, மே 05

பிரதிச் சபாநாயகர் பதவிக்கு இம்தியாஸ் பாக்கீர் மாக்காரின் பெயரை முன் மொழிவதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் கூட்டம், கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தலை மையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன் போதே இம்முடிவு எடுக்கப்பட் டுள்ளது. ஆளுங்கட்சியின் சார்பில் டிலான் பெரேரா களமிறக்கப்படலாம் என தெரியவருகின்றது. (அ)

# குடிவரவு குடியகல்வு திணைக்கள சேவைகள் வழமைக்கு திரும்பின

கொழும்பு, மே 05

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் சேவைகள் வழமைக்குத் திரும்பியுள்ளன.

கணினி அமைப்பில் ஏற்பட்ட கோளாறு காரணமாக, அத்தியாவசியமில்லாத சேவைகளுக்காக நேற்று தமது அலுவலகத்துக்கு வருவதை தவிர்க்குமாறு டிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்திருந்தது.

இதன் காரணமாக ஒரு நாள் சேவைகளிலும் தாமதம் ஏற்படலாம் என திணைக்களம் தெரிவித்திருந்தது.

இந்நிலையில், கோளாறு திருத்தம் செய்யப்பட்டு, சேவைகள் வழமைபோல இடம்பெறுமென திணைக் களத்தின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (அ)

# அநுரகுமார மீது சட்ட நடவடிக்கை

## யோசித ராஜபக்ஷ தெரிவிப்பு

கொழும்பு, மே 05

**மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸா நாயக்கவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க உள்ளதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் புதல்வரும் அவரது ஊழியர்கள் குழுவின் தலைமை அதிகாரியுமான யோஷித ராஜபக்ஷ தெரிவித்தார்.**

அநுரகுமார திஸாநாயக்க நேற்று முன்தினம் கொழும்பில் தன்னை குறித்து சுமத்திய குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை என்பதுடன் மக்களை தவறாக வழிநடத்தும் செயல் என யோஷித ராஜபக்ஷ வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

இதன் மூலம் தனக்கு ஏற்பட்டுள்ள அவப்பெயருக்காக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு சட்டத்தரணிகளுக்கு ஆலோசனை வழங்கியதாகவும் அவர் கூறினார்.



மேலும் அநுரகுமார திஸாநாயக்க வெளியிட்டுள்ள தகவல்களை அருவருப்புடன் கண்டிப்பதாகவும் யோஷித ராஜபக்ஷ மேலும் குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று முன்தினம் அரசியல்வாதிகள், அவர்களை சார்ந்தவர்கள் மற்றும் அதிகாரிகளின் ஊழல் மோசடிகள் தொடர்பான கோப்புகளை அம்பலப்படுத்திய அநுரகுமார திஸாநாயக்க, யோஷித ராஜபக்ஷவுக்கு சொந்தமாக பல இடங்களில் பல கோடி ரூபாய் பெறுமதியான காணிகள் மற்றும் சொத்துக்கள் இருப்பதாக கூறியிருந்தார்.

அதற்கான ஆதாரங்களையும் அவர் சமர்ப்பித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# வரலாற்றுத் தவறுகளே நெருக்கடிக்கு காரணம்

## பாராளுமன்றில் நிதி அமைச்சர்

கொழும்பு, மே 05

தற்போது நாட்டில் ஏற்பட்ட நெருக்கடிக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் செய்த வரலாற்றுத் தவறுகளே காரணம் என நிதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

வரி குறைப்பு, பொருத்தமான நேரத்தில் சர்வதேச நாணய நிதியத்தை நாடாமை மற்றும் கடன் மறுசீரமைப்பில் தாமதம் என்பனவே இதற்கு காரணம் என அவர் கூறினார்.

எனவே தற்போதைய நெருக்கடியை இரண்டு ஆண்டுகளில் தீர்ப்பதா அல்லது 5 முதல் 10 ஆண்டுகள் வரை இழுத்தடிப்பதா என்பதை அரசியல்வாதிகளே முடிவு செய்யவேண்டும் என அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று நாட்டின் பொருளாதார நிலை குறித்து உரையாற்றிய நிதியமைச்சர் அலி சப்ரி, கடந்த ஆண்டின் செலவினமானது வருமானத்தைவிட இரண்டு மடங்கு அதிகம் என்றும் குறிப்பிட்டார்.

2021 ஆம் ஆண்டின் மொத்த வருவாய் 1464 பில்லியன் என்றும் செலவு 3522 பில்லியன் ரூபாய் எனவும் நிதியமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

இதேவேளை, நாட்டில் தற்போது பயன்படுத்தக்கூடிய வெளிநாட்டு கையிருப்பு 50 மில்லியன் அமெரிக்க டொலருக்கும் குறைவாக இருப்பதாக நிதி அமைச்சர் அலி சப்ரி குறிப்பிட்டார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிவாயு தட்டுப்பாடு, எரிபொருள் தட்டுப்பாடு தொடர்பில் பாராளுமன்றத்திலும் ஒட்டுமொத்த சமூகத்திலும்



பல விவாதங்களும் விமர்சனங்களும் இடம்பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போது பற்றாக்குறையாக காணப்படும் இந்த அத்தியாவசியப் பொருட்கள் எதிர்வரும் காலங்களில் நாட்டிற்கு முற்றாக இழக்கப்படும் என அவர் எச்சரித்தார்.

தற்போது இலங்கை எதிர்கொள்ளும் ஒட்டுமொத்த பொருளாதார நெருக்கடி மிகவும் பாரதூரமானதும் ஆழமானதுமானதென்றும் வலியுறுத்தினார்.

சுதந்திரத்திற்குப் பின்னரான மிக மோசமான பொருளாதார நெருக்கடியை இலங்கை எதிர்கொண்டுள்ளதாக நிதியமைச்சர் கூறினார்.

இந்த அச்சுறுத்தலில் இருந்து விடுபட அனைவருக்கும் தேசிய பொறுப்பு உள்ளது எனத் தெரிவித்த அவர், நாட்டில் தற்போது நடைமுறையில் உள்ள வரிக் கொள்கையை முன்னெடுத்துச் செல்ல முடியுமா என்பது கேள்விக்குறி எனவும் குறிப்பிட்டார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியை ஓரிரு மாதங்களில் தீர்க்க முடியுமா என்று தெரியவில்லை என்றும் கடந்த காலங்களில் வரிகள் அதிகரிக்கப்படவேண்டிய காலப்பகுதியில் அரசாங்கம் வரிகளை குறைத்ததாகவும் அதன் பலனை இன்று அனுபவிக்க வேண்டியுள்ளதாகவும் அமைச்சர் கூறினார். (அ)

# நம்பிக்கையில்லா பிரேரணையை எதிர்கொள்வதற்கு நாங்கள் தயார்

## பிரசன்ன ரணதுங்க அறிவிப்பு

கொழும்பு, மே. 05

அரசாங்கத்திற்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்க்கட்சி கொண்டுவருமானால், அதனை எதிர்கொள்ள அரசாங்கம் தயார் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சியின் பிளவு காரணமாக அந்த யோசனையின் ஊடாக அவர்களின் எதிர்பார்ப்பை அடைய முடியாதென ரணதுங்க தெரிவித்துள்ளார். இதேவேளை, மக்கள் பிரதிநிதிகளாக, மக்களின் வாக்குகளில் தெரிவு செய்யப்பட்ட அரசியல்வாதிகள், மக்களின் மேம்பாட்டுக்காக செயற்படுகிறார்களா என்ற கேள்வி மக்கள் மத்தியில் காணப்படுவதாக அமைச்சர் விதுர விக்ரமநாயக்க கூறினார். (அ)



# திவாலாகிவிட்டது இலங்கை!

## சபையில் கூறினார் சஜித் பிரேமதாஸ

கொழும்பு, மே 05

இலங்கை தற்போதே வெனிசூலா மற்றும் லெபானான் போன்ற திவாலான நாடாக மாறியுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நிதியமைச்சர் அலி சப்ரி உரையாற்றிய பின்னர் உரை நிகழ்த்திய சஜித் பிரேமதாஸ, நாட்டின் தலைவரால் எடுக்கப்பட்ட பைத்தியக்காரத் தீர்மானம் காரணமாக இன்றைய நிலை ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

பண்டோரா மற்றும் ஏனைய இடங்களில் வைப்புச் செய்யப்பட்டுள்ள டொலர்களை நாட்டுக்கு கொண்டு வந்தால் நாட்டில் மீண்டும் டொலர்கள் கிடைக்கும் என்றும் அவர் கூறினார்.

நிதியமைச்சர் என்ற வகையில் அரசாங்கத்தின் தவறுகளை ஏற்றுக்கொண்டமையை வரவேற்ற சஜித் பிரேமதாஸ, அமைச்சரவையில் இருந்து கொண்டு அமைச்சரவையில் இடம்பெற்ற தவறுகளை ஏன் தட்டிக்கேட்கவில்லை என்றும்



கேள்வி எழுப்பினார்.

வறுமை ஒழிப்பு திட்டத்தை விமர்சிக்கவேண்டாம் என்று குறிப்பிட்ட அவர், இந்த திட்டங்களை நடப்பு அரசாங்கமே அரசியலுக்காக பயன்படுத்தியதாக குற்றம் சுமத்தினார்.

அரச சேவையாளர்களுக்கு வழங்கப்பட்ட வேதன உயர்வு பிழையானது என்று நிதியமைச்சர் குறிப்பிட்டதை கண்டித்த அவர், அதன் காரணமாக நாட்டில் நிதி பிரச்னை ஏற்படவில்லை என்றும் குறிப்பிட்டார்.

இலங்கையில் கடந்த 30 மாத காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளில் இருந்து வெளியேறி சர்வதேசத்துடன் பேசுவதற்கான பிரயத்தனத்துக்காக தாம் நிதியமைச்சருக்கு நன்றி கூறுவதாகவும் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இலங்கைக்கு உதவியளிப்பதற்கு முன்னர் இந்தியா, தம்மிடம் உதவியளிப்பதா? இல்லையா? என வினவியதாக சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டார்.

அவசரக்கடன் பெறும் வகையில் குறித்த சர்வதேச நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடத்த எதிர்க்கட்சி தயார் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை சர்வதேச உணவுத்திட்டம், மற்றும் ஐக்கிய நாடுகளின் நிறுவனங்களுடன் பேசி எதிர்வரும் காலத்தில் எதிர்பார்க்கப்படும் உணவுத் தட்டுப்பாட்டை தவிர்க்கவேண்டும் என்றும் சஜித் பிரேமதாஸ கேட்டுக்கொண்டார்.

நடப்பு ஜனாதிபதியின் கீழ் இந்த நாட்டை கொண்டு செல்ல முடியாது என்று குறிப்பிட்ட அவர், தமது கட்சி சமர்ப்பித்துள்ள இரண்டு நம்பிக்கையில்லா யோசனைகளுக்கு விரைவான திகதியை தருமாறும் பிரதிச் சபாநாயகர் பதவிக்கு ஒருவரை நியமிக்குமாறும் கோரினார். (அ)



# பாராளுமன்ற வளாகத்தை சுற்றி குழாய் மூலம் பாதுகாப்பு வேலி!

கொழும்பு, மே 05

பாராளுமன்றத்தை சுற்றி நேற்று புதன்கிழமை பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டது.

அதற்கமைய, பாராளுமன்ற வளாகத்தில் குழாய்களைப் பயன்படுத்தி பாதுகாப்பு வேலி அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பாராளுமன்றம் இம்மாதம் முதல் முறையாக நேற்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் காலை 10.00 மணிக்கு கூடியது. (அ)

## பாணந்துறையில் அதிபர் தண்டித்ததால் பாடசாலைக்குத் தீ வைத்த மாணவர்கள்

கொழும்பு, மே 05

பாணந்துறையில் பாடசாலை ஒன்றின் அதிபரின் அலுவலகம் மற்றும் கணினி ஆய்வு கூடத்துக்கு மாணவர்கள் இருவர் தீ வைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதனுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் 12 மற்றும் 8 வயதுடைய இரண்டு சிறுவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாணவர் ஒருவர் அணிந்து வந்த கையுறை தொடர்பில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் அதிபர் தண்டனை வழங்கியுள்ளார்.

இதனால் கோபமடைந்த மாணவர் மற்றுமொரு மாணவனுடன் இணைந்து அதிபரின் நாற்காலிக்கு தீ வைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் மாலை 5.00 மணியளவில் பாடசாலை ஒன்றில் தீ பரவியுள்ளதாக கிடைத்த தகவலையடுத்து பாணந்துறை வடக்கு பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

இந்த தீ விபத்தில் கணினி ஆய்வகத்தில் இருந்த இருபதுக்கும் மேற்பட்ட கணினிகள், துணைக்கருவிகள், மின்விசிறிகள், ஏராளமான பாடப்புத்தகங்கள், அதிபரின் நாற்காலி மற்றும் பல கோப்புகள் எரிந்து நாசமாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தீ விபத்தின்போது பாடசாலை மூடப்பட்டிருந்ததுடன் தீ பரவுவதைக் கண்ட குடியிருப்புவாசிகள் தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

குறித்த இரு மாணவர்களும் அதிபரின் அறையில் இருந்த சாவியை எடுத்து ஏனைய வகுப்பறைகளை திறந்து உடைமைகளுக்கு சேதம் ஏற்படுத்தியுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

பாணந்துறை வடக்கு பொலிஸார் அப்பகுதியில் உள்ள வீதியின் இரு புறமும் உள்ள சிசிரிவி காட்சிகளை ஆய்வு செய்ததில் இரு மாணவர்கள் சைக்கிளில் சென்று சிறிது நேரத்தில் திரும்பி வருவது தெரியவந்தது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் போது இரண்டு மாணவர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ)

## கோட்டாபய-மஹிந்த இல்லாத இடைக்கால அரசுக்கு ஆதரவு!

### சபையில் ஜே.வி.பி. பகிரங்க அறிவிப்பு

கொழும்பு, மே 06

**அபிவிருத்தி என்ற போர்வையில் இடம்பெற்ற நிதி துஷ்பிரயோகங்களே இன்றைய பிரச்னைகளுக்கான காரணம் என்று ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க நேற்று பாராளுமன்றில் தெரிவித்தார்.**

கோட்டாபய, மஹிந்த ஆகிய இருவரும் இல்லாத ஒரு இடைக்கால அரசாங்கத்துக்கு ஆதரவளிக்க நாம் தயார் எனவும் அவர் கூறினார்.

இலங்கை நாடு வறுமையை இருக்கின்றபோது அரசாட்சியாளர்கள் பணம் படைத்தவர்களாக உள்ளனர் என்று அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நிதியமைச்சர் இன்று அரசாங்கத்தில் இடம்பெற்ற தவறுகளை ஏற்றுகொள்கின்ற போதும் அது வெறுமனே ஏற்றுகொள்ளக்கூடிய தவறுகளாக கருதமுடியாது.

இதன் காரணமாக பாரிய நிதி முடக்கம் ஏற்பட்டுள்ளது.



இந்த தவறுகளுக்காக ஜனாதிபதி பொறுப்பேற்கவேண்டும். அமைச்சரவை இதற்கு பொறுப்பேற்கவேண்டும்.

எனவே பொருளாதாரத்தை இந்தளவுக்கு பாரிய பிரச்னைக்கு உள்ளாகியுள்ள ஜனாதிபதி பதவி விலகவேண்டும்.

எதனையும் செவிமடுக்காத ஆட்சியாளர், அவருக்கு ஒத்துழைப்பு வழங்கியவர்கள் காரணமாகவே இன்றைய நிலை ஏற்பட்டுள்ளது.

எனினும் இத் தனை பிரச்னைக்கும் காரணமான கோட்டாபய மற்றும் பிரதமர் அங்கம் வகிக்கின்ற இடைக்கால அரசாங்கத்தில் நாம் அங்கம் வகிக்கப்போவதில்லை.

அவர்கள் இருவரும் இல்லாத ஒரு இடைக்கால அரசாங்கத்துக்கு ஆதரவளிக்க நாம் தயார் - என்றார். (அ)

## 3 வயது இரட்டையர்களில் ஒருவர் கிணற்றில் தவறி வீழ்ந்து மரணம்!

### ஊரெழுவில் துயரச் சம்பவம்

யாழ்ப்பாணம், மே 05

வீட்டுக் கிணற்றில் தவறி வீழ்ந்த 3 வயது பாலகன் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம், ஊரெழு மேற்கில் நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இரட்டையர்களில் ஒருவரான கிருஷ்ணகாந்தன் சித்தாத் (வயது-3) என்ற பாலகனே உயிரிழந்தார்.

இரட்டையர்கள் ஊஞ்சலில் விளையாடிக் கொண்டிருந்துள்ளனர். அவர்களுக்கு பிஸ்கட் கொடுத்துவிட்டு தாயார் தேநீர் தயாரிக்க சமையலறைக்குச் சென்றுள்ளார்.

மீள வந்து பார்த்தபோது பாலகன் ஒருவரைக் காணவில்லை. வீட்டு வளவில் தேடிய பின் கிணற்றை பார்த்த போது பாலகன் கிணற்றில் தவறி வீழ்ந்தமை கண்டறிப்பட்டது.

உடனடியாக மீட்டு யாழ். போதனா மருத்துவமனைக்குக் கொண்டு சென்றபோதும் பாலகன் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என்று மருத்துவ அறிக்கையிடப்பட்டுள்ளது.

கட்டுக் கிணற்றை சுற்றி தகரத்தினால் வேலியிடப்பட்டுள்ளது. அதில் ஏறியபோதே பாலகன் கிணற்றுக்குள் தவறி வீழ்ந்திருக்கலாம் என்று இறப்பு விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

யாழ். போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் இறப்பு விசாரணையை மேற்கொண்டார். (அ-03)

## இத்தாலிக்கு செல்ல முயன்ற 5 பேர் கைது!

கொழும்பு, மே 05

சட்டவிரோத கடவுச் சீட்டை பயன்படுத்தி இத்தாலிக்கு செல்ல முயற்சித்த ஐந்து பேர் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்தின் குடிவரவு குடியகல்வு திணைக்கள அதிகாரிகளினால் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கையில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி நிலைமை காரணமாக தாம் தப்பிச்செல்ல முயன்றதாக சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் தெரிவித்துள்ளனர். (அ)

## அதிபர், ஆசிரியர்களும் நாளை சுகவீன விடுமுறை போராட்டம்

### இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் அறிவிப்பு

கொழும்பு, மே. 05

மே 06 ஹர்த்தால் தினத்தன்று அனைத்து அதிபர், ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்களும் சுகயீன விடுமுறையை அறிவித்து பாடசாலைகளை நடத்தாது தம் எதிர்ப்பை வெளிப்படுத்தி அரச எதிர்ப்பு செயற்பாடுகளை உயர்ந்த பட்சம் முன்னெடுக்குமாறு இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் உப தலைவர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திபொன்றிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாளை வெள்ளிக்கிழமை எமது நாட்டின் பொருளாதாரத்தையும் சீரழித்து, நாட்டின் எதிர்காலத்தைப் பலி கொடுத்து, நாளைய சந்ததியினரையும் அழிவின் விளிம்பிற்கே கொண்டுவந்துள்ள ராஜபக்ஷ ஆட்சி உள்ளடங்கலாக மக்களை வதைக்கும் அரசாங்கத்தை விரட்டியடிக்கவேண்டுமென அனைத்து அரச ஊழியர்கள் உட்பட, தனியார் மற்றும் அரச ஆதிக்கம் உடைய நிறுவனங்கள் ஒன்றிணைந்து ஹர்த்தாலை முன்னெடுக்கவுள்ளனர்.

அதிகூடிய அரச ஊழியர்களாக உள்ள ஆசிரியர்கள் கடந்த 28ஆம் திகதி போராட்டத்திற்கு தமது பூரண ஒத்துழைப்பை வழங்கியிருந்தார்கள்.

அதேபோன்று மே 06 ஹர்த்தால் தினத்தன்று அனைத்து அதிபர், ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்களும் சுகயீன விடுமுறையை அறிவித்து பாடசாலைகளை நடத்தாது தம்



எதிர்ப்பினை வெளிப்படுத்தி அரச எதிர்ப்பு செயற்பாடுகளை உயர்ந்தபட்சம் முன்னெடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

அத்துடன் தத்தமது பிரதேசங்களில் இடம்பெறும் போராட்டங்களில் அனைத்து அதிபர், ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் தவறாது கலந்து கொண்டு எமது பலத்தினை வெளிப்படுத்துவதோடு அரச எதிர்ப்பு பதாதைகளையும் காட்சிப்படுத்தி பொது உடைமைகள், தனியார் உடைமைகள் எதனையும் பாதிக்காத வகையில் இப்போராட்டத்தை முன்னெடுத்து எமது பலத்தினை வெளிப்படுத்த வேண்டியதும் அவசியமாகும்.

மேலும் ஊழல் மலிந்த அரசாங்கம் மக்கள் போராட்டத்தை அடக்குவதற்காக பல்வேறு சதித் திட்டங்களை கட்டவிழ்த்துவிடுவதோடு அரசாங்கத்தால் பயன்படுத்தியுள்ள ஆட்கள் உங்கள் போராட்டத்தின் மத்தியில் வந்து பல இடையூறுகளை விளைவிப்பதற்கான முயற்சிகளை முன்னெடுக்கலாம்.

அதனால் அவ்வாறான வன்முறை முயற்சிகளுக்கு இரையாகாது மக்கள் போராட்டத்தை பாதுகாப்பான முறையில் முன்னெடுத்து, அரசாங் கத்தை விரட்டியடிக்கும் இப்போராட்டத்தை வெற்றியடையச் செய்ய வேண்டும்-என்றார். (அ)

## கிளிநொச்சி விவசாயிகளிடம் பெருந்தொகை பணம் அறவீடு

கிளிநொச்சி, மே 05

கிளிநொச்சி பரந்தன் கமநல சேவை நிலையத்துக்குட்பட்ட கோரக்கன் கட்டுப்பகுதியில் கமக்கார அமைப்பினால் சட்டவிரோதமான முறையில் விவசாயிகளிடம் இருந்து பணம் அறவிடப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி பரந்தன் கமநல சேவை நிலையத்துக்குட்பட்ட கோரக்கன் கட்டுப்பகுதியில் கமக்கார அமைப்பினால் எந்த வித பயிர்ச் செய்கை கூட்டங்களும் நடத்தப்படாது, நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் கமநல சேவைகள் திணைக்களம் ஆகியவற்றின் எந்தவித அனுமதிகளுமின்றி வாய்க்கால் அமைப்பதற்கென ஒவ்வொரு விவசாயிகளிடமிருந்தும் தலா 2,500 ரூபா வீதம் அறவிடப்பட்டிருப்பதாக விவசாயிகளால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் பரந்தன் கமநல சேவைநிலையத்தின் பெரும்பாக உத்தியோகத்தரை தொடர்பு கொண்டு வினவியபோது,

கோரக்கன் கட்டுப்பகுதியில் இவ்வாண்டுக்கான சிறு போகச் செய்கை தொடர்பான கலந்துரையாடல்கள் எதுவும் நடத்தப்படவில்லை.

எந்த தீர்மானங்களுமின்றி பற்றுச்சீட்டுகள் இல்லாது விவசாயிகளிடமிருந்து பணம் அறவிடப்பட்டிருந்தால் அது ஒரு சட்டவிரோதமான செயற்பாடாகும்.

இது தொடர்பாக விவசாயிகள் முறைப்பாடு தெரிவிக்கும் இடத்தில் விசாரணைகளை மேற்கொள்வதற்கு தாங்கள் தயார் என்றும் தெரிவித்தார்.

அத்துடன், இப் பிரதேசத்தில் சிறு போகச் செய்கை மேற்கொள்வதற்கான எந்த தகவல்களும் எங்களுக்கு உத்தியோக பூர்வமாகக் கிடைக்கவில்லை.

அவ்வாறு கிடைக்கும்போது தான் மானிய கொடுப்பனவுகள், பயிர் காப்புறுதிகள், ஏனைய கொடுப்பனவுகள் தொடர்பில் விவசாயிகளுடன் பிரதேச மட்ட கலந்துரையால்களை நடத்தி தீர்மானங்களை எடுக்க முடியும் என்றும் அவர் கூறினார். (அ)

# வடக்கு - கிழக்கு - மலையகம்: வறுமை ஒழிப்பு, பொருளாதார மீட்சிக்கு என்ன செய்யலாம்?

ருசாங்கன் கோடீஸ்வரன்




*தமிழர்களின் இன்றைய முதன்மையான பிரச்சினை என்ன என்ற தலைப்பிலான ஆய்வு ரீதியான பார்வை ஒன்றினை உழைப்பாளர் தினமான மே தினத்தில் நான் வெளியிட்டிருந்தேன். அரசியலுரிமைப் பிரச்சினையை முதன்மைப்படுத்திய நீண்டகால ஆயுத மோதல்களின் விளைவாக, வடக்கு, கிழக்கு பிரதேசங்கள், ஏற்கனவே வறுமை நிலையிலிருந்த மலையகப் பகுதிகளையும் விஞ்சி வறுமையின் உச்ச நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டதை இந்த ஆய்வில் புள்ளிவிபரங்களுடன் வெளிப்படுத்தியிருந்தேன்.*

*அதிகரித்த வறுமை நிலை காரணமாக, அதன் பக்க விளைவுகளாக கல்வி அறிவு வீழ்ச்சி, போதைப்பொருள் பாவனை, வாள்வெட்டு, சமூக சீரழிவு, கலாசார பிறழ்வு என்பன அதிகரித்துள்ள நிலையில், உடனடியாக இவற்றைச் சீர்செய்வேண்டிய அவசியம் ஏற்பட்டிருப்பதையும், இதனைச் சாதிப்பதற்கு தமிழ் மக்களின் சமூக, பொருளாதார, கலாசார உரிமைகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் உடன் கவனம் செலுத்தப்படவேண்டும் என்பதையும் அந்த ஆய்வில் வலியுறுத்தியிருந்தேன்(முதலாவது பதிற்குறியின் ஆய்வுக்கான இணைப்பு உள்ளது).*

*ஆய்வு ரீதியான அவதானிப்பு, ஏற்பட்டிருக்கும் மோசமான நிலையைச் சுட்டிக்காட்டுவது என்பதுடன் நின்றுவிடாமல், மேற்படி ஆய்வில் அடையாளப்படுத்திய பிரச்சினையைத் தீர்க்க என்ன செய்யப்படலாம் என்கின்ற நடைமுறை சாத்தியமான வழிமுறைகளை இந்த ஆய்வில் விபரிக்க விளைகிறேன்.*

*மிக நீண்டகாலமாக வறுமை நிலையிலிருந்த மலையகப் பிரதேசங்கள் தொடர்ந்தும் அதே நிலையிலேயே இருக்க, ஆயுத மோதல்களின் விளைவாக ஆரம்பத்தில் கிழக்கும், பின்னர் அதையும் முந்திக்கொண்டு வடக்கும் வறுமை நிலையில் உயர்ந்துவிட்டன என்பதை புள்ளி விபரங்களுடன் எனது ஆய்வில் குறிப்பிட்டிருந்தேன். மாவட்ட ரீதியாக, கிளிநொச்சி வறுமையில் முதலிடத்திலும், தொடர்ந்து முல்லைத்தீவு, மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம், கேகாலை, பதுளை, இரத்தினபுரி, நுவரெலியா, மொனராகலை, கண்டி என்பன அதிக வறுமை நிலையில் இருப்பதை புள்ளி விபரத் திணைக்களத்தின் 2016ம் ஆண்டு அறிக்கையின் தரவுகளுடன் விபரித்திருந்தேன்.*

*இந்த மாவட்டங்களில் வறுமையின் உயர்வான நிலையிலிருக்கும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மட்டக்களப்பு ஆகியவற்றின் வறுமை நிலையைப் போக்க மேற்கொள்ளப்படக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பாக, கூடுதல் வறுமை நிலையில் இருக்கும் கிளிநொச்சி மாவட்டத்தை உதாரணமாகக் கொண்டு சாத்தியமான செயற்றிட்டம் ஒன்றை இங்கே விபரிக்கிறேன். இந்த மூன்று மாவட்டங்களுமே அவற்றின் பிரதான பொருளாதார நடவடிக்கைகள், அவற்றில் ஏற்பட்டிருக்கும் பின்னடைவு நிலை என்பவற்றில் பொதுவான தன்மைகளைக் கொண்டிருப்பதால், கிளிநொச்சி உதாரணம் மற்றைய இரு மாவட்டங்களுக்கும் பொருந்தக்கூடிய பொதுத்தன்மைகளைக் கொண்டிருக்கிறது என்று நான் கருதுகிறேன்.*

## கிளிநொச்சி மாவட்டம்

*கிளிநொச்சி மாவட்டத்தைப் பொருத்தவரையில் அதன் பிரதான பொருளாதார உற்பத்தி நடவடிக்கையாக விவசாயமே இருக்கிறது. **147,421** பேரை மொத்தச் சனத்தொகையாகக் கொண்ட கிளிநொச்சியில், **24,935** விவசாயிகளும், **21,387** விவசாய கூலிகளுமாக **46,322** பேர் இந்த மாவட்டத்தில் விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றனர். குடும்ப அடிப்படையில் பார்த்தால் மாவட்டத்தின் மொத்தமாக உள்ள **47,428** குடும்பங்களில் **24,935** குடும்பங்கள், கிட்டத்தட்ட அரைவாசிக் குடும்பங்கள் விவசாயத்திலேயே ஈடுபடுகின்றன (மாவட்ட புள்ளிவிபர கையேடு **2021**).*

## விவசாயமும், நெற்செய்கையும்

*மாவட்ட புள்ளிவிபரத்திணைக்களத் தகவல்களின் படி, கிளிநொச்சி மாவட்டத்தில் **31,189.60** ஹெக்டேயர் நிலப்பரப்பில் விவசாயம் மேற்கொள்ளப்படுகிறது. இதில் **28,433.60** ஹெக்டேயரில் நெற்செய்கையே பிரதானமாக மேற்கொள்ளப்படுகிறது. அதாவது, விவசாயம் மேற்கொள்ளப்படும் நிலப்பரப்பில் **91** சதவீதமான நிலத்தில் நெற்செய்கையே மேற்கொள்ளப்படுகிறது.*

*மழையை நம்பி காலபோகத்தில் கூடுதல் நிலப்பரப்பிலும், பாரிய மற்றும் சிறியளவிலான குளங்களின் நீர்ப்பாசனத்தின்கீழ் கணிசமான நிலப்பரப்பிலும் மேற்கொள்ளப்படும் நெற்செய்கை கிளிநொச்சி மாவட்டத்தின் பிரதான பொருளாதார உற்பத்தித் தேட்டம் எனலாம். ஆனால், நெல்லுற்பத்தியின் சுமார் 80சதவீதத்துக்கும் அதிகமான அளவு பெறுமதி சேர்க்கப்படாமல்(குறைந்தபட்சம் அரிசியாகவேனும் மாற்றப்படாமல்) மாவட்டத்துக்கு வெளியே சந்தைப்படுத்தப்படுகிறது. வெளிமாவட்டங்களுக்குச் செல்லும் நெல் அங்கேயே அரிசியாக்கப்பட்டு மீண்டும் கிளிநொச்சி நுகர்வோர் சந்தைக்கு வருகிறது. இதனால், நெல் உற்பத்தியாளர் தமது உற்பத்தியிலிருந்து குறைந்தளவு வருமானத்தையே பெறுகின்ற அதேவேளை, மாவட்டத்தின் நுகர்வோரும் அரிசிக் கொள்வனவில் பாதிப்புக்குள்ளாகி பெருமளவு நிதி மாவட்டத்துக்கு வெளியே செல்கின்ற நிலைமையே காணப்படுகிறது. இது இந்த மாவட்டம் வறுமை நிலையில் நீடிப்பதற்கு முக்கிய காரணங்களில் ஒன்றாக அமைகிறது.*


## உப உணவுப் பயிர்ச்செய்கை

*நெற்செய்கைக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவம், ஏனைய உப உணவுப் பயிர்ச்செய்கைக்குக் கொடுக்கப்படுவதில்லை. பிற தானியங்களான உழுந்து, பயறு, கௌபி மற்றும் உடல் ஆரோக்கியத்துக்கு பாரம்பரியமாகப் பழக்கத்தில் இருந்துவந்த குரக்கன், சாமை, வரகு, தினை, கம்பு என்பனவும், மரக்கறி மற்றும் பழச்செய்கையும் கிளிநொச்சி மாவட்டத்தில் போதியளவு மேற்கொள்ளப்படாத நிலையே காணப்படுகிறது.*

*நெற்செய்கையைப் போன்றே, குறைந்தளவேனும் மேற்கொள்ளப்படுகின்ற உப உணவுப் பயிர்ச்செய்கையின் விளைச்சல்களும் பெறுமதி சேர்க்கப்பட்டு சந்தைப்படுத்தப்படுவது குறைவாகவே இருக்கிறது. அதிகளவு மரவள்ளி விளைகின்ற காலத்தில் கிலோ 20 ரூபாவுக்கு அதனைச் சந்தை இடைத்தரகர்களுக்கு விற்கும் நிலையிலேயே விவசாயிகள் இருக்கின்றனர். மரவள்ளிப் பொரியல், மா, சவ்வரிசி என பெறுமதி சேர்த்து சந்தைப்படுத்தும் முயற்சிகள் மிகக் குறைவாகவே இருக்கிறது. இதே நிலையே பூசணி மற்றும் ஏனைய மரக்கறி மற்றும் பழச்செய்கையிலும் காணப்படுகிறது.*

## கால்நடை உற்பத்தி

*விவசாயத்துக்கு அடுத்ததாக மாவட்டத்தில் முக்கிய இடம் பிடிக்கும் கால்நடை உற்பத்தித்துறைக்கு போதியளவு முக்கியத்துவம் கொடுக்கப்படுவதில்லை. தேசிய, மாகாண அமைச்சு மட்டத்தில் 5க்கு மேற்பட்ட திணைக்களங்கள் சம்பந்தப்பட்டு விவசாயம் மேம்படுத்தப்பட்டு வரும் நிலையில், கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரம் என இரண்டையுமே ஒரேயொரு திணைக்களமே கவனித்துவருகிறது. இதனால், கால்நடை உற்பத்தித்துறை போதியளவு முன்னேற்றம் காணாத நிலையே உள்ளது. பால் மற்றும் முட்டைக்கான தேவை வெகுவாக அதிகரித்துள்ள சூழ்நிலையிலும், நிலவும் கேள்வியை நிரப்ப முடியாத நிலையிலேயே கால்நடை உற்பத்தித்துறை காணப்படுகிறது.*




*கால்நடை உற்பத்தியில் பிரதமான இடம் பிடிக்கும் பாலுற்பத்தி பெருமளவுக்கு கிளிநொச்சி மாவட்டத்துக்கு வெளியேயே எடுத்துச் செல்லப்படுகிறது. இதனால், உள்ளூர் நுகர்வுக்கு பால் போதியளவு பயன்படுத்தப்படாதது மாத்திரமன்றி, பால் சார்ந்த பெறுமதிசேர் உற்பத்திகளூடாக அதிக வருமானமீட்டும் வாய்ப்பையும் கால்நடை உற்பத்தியாளர் இழந்துள்ளனர்.*

## கடற்றொழில்

*கிளிநொச்சி மாவட்ட சனத்தொகையில் **2,751**பேர் கடற்றொழில் ஈடுபடுவதாக மாவட்ட புள்ளிவிபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. மாவட்டத்தின் கிழக்குப் பகுதியில் **21** கிலோமீற்றர் நீளமும், மேற்குப் பகுதியில் **133** கிலோமீற்றர் நீளமும் காணப்படும் கடற்கரையோரங்கள் மாவட்டத்தின் கடற்றொழில் மேம்பாட்டுக்கு வலுச்சேர்க்கும் பிரதான வளமாக இருக்கிறது. இதற்கு மேலதிகமாக மாவட்டத்திலுள்ள சிறியதும், பெரியதுமான குளங்கள் அனைத்திலுமே நன்னீர் மீன்வளர்ப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

*எனினும், விவசாய மற்றும் கால்நடைத்துறைகளைப் போலவே கடற்றொழில் உற்பத்திகளும் பெறுமதிசேர்க்கப்படாமலே பெரும்பாலும் அப்படியே விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அங்கொன்றும், இங்கொன்றுமாகக் காணப்படும் சிறியளவிலான முயற்சிகள் தவிர, கடலுணவு உற்பத்தித் தொழிற்சாலைகள் போதியளவு இல்லாத நிலையே காணப்படுகிறது.*

*இவ்வாறு,*

***1.** பெறுமதி சேர்க்கப்படாமல் வெளிமாவட்டங்களுக்குச் சந்தைப்படுத்தப்படும் நெல்லுற்பத்தி.*

***2.** நெல் தவிர்ந்த உப உணவுப் பயிர்ச்செய்கையில் போதிய கவனம் செலுத்தப்படாமை.*

***3.** உற்பத்தி செய்யப்படும் உப உணவுப் பொருள்களும் பெறுமதி சேர்க்கப்படாமலே சந்தைப்படுத்தப்படுதல்.*

***4.** கால்நடை உற்பத்தியில் போதிய கவனம் செலுத்தப்படாமை.*

***5.** பாலுற்பத்தி பெறுமதிசேர்க்கப்படாமல் வெளி மாவட்டங்களுக்கு அனுப்பப்படுதல்.*

***6.** பெறுமதி சேர்க்கப்படாத கடலுணவு உற்பத்தி.*

*என்பன காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தின் விவசாய, கால்நடை மற்றும் கடற்றொழில் முயற்சிகள் நியாயமானளவு வருமானத்தை உற்பத்தியாளர்களுக்கும், மாவட்டத்தின் மொத்த உற்பத்தி வருமானத்துக்கும் பெற்றுத்தராத நிலை காணப்படுகிறது.*

*எனவே, உப உணவுப் பயிர்ச்செய்கை மற்றும் கால்நடை உற்பத்தி போன்றவற்றை மேம்படுத்த மேலதிக நடவடிக்கை எடுப்பதுடன், அனைத்து வகையான உற்பத்திகளையும் பெறுமதிசேர் உற்பத்திகளாக மாற்றியமைக்க புதிய கைத்தொழில்களை அறிமுகப்படுத்தி வளர்த்தெடுப்பது அவசியமாகிறது.*

## கைத்தொழிற்றுறை மேம்பாடு

*இவ்வாறு, கைத்தொழில்களை ஆரம்பித்து உற்பத்திகளை மேற்கொள்வதற்கு மாவட்டத்தின் தனியார் துறையைச் சேர்ந்தவர்களை ஊக்கப்படுத்தவேண்டும். நெல் குற்றும் ஆலைகள், உப உணவு பெறுமதிசேர் உற்பத்திகளை மேற்கொள்ளும் தொழிற்சாலைகள், பாலுணவு உற்பத்தித் தொழிற்சாலை, கடலுணவு உற்பத்தித் தொழிற்சாலைகள் என்று புதிய கைத்தொழில்களை ஆரம்பிக்க அவர்களை ஊக்குவிக்கவேண்டும்.*

*இதுதவிரவும், சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடுவதற்கான ஆர்வத்தை மாவட்டத்தின் இளையோர் மத்தியில் ஏற்படுத்தி, மாவட்டத்தில் அவசியமாக உணரப்பட்டுள்ள பொருத்தமான கைத்தொழில் முயற்சிகளை ஆரம்பிக்க அவர்களை ஊக்குவிக்க வேண்டும். அவ்வாறான முயற்சிகளுக்கான அரச, மற்றும் வங்கிசார் உதவிகள், ஊக்குவிப்புக்களை அவர்களுக்குக் கிடைக்கச்செய்யவேண்டும்.*

## திறன்மிக்க தொழிற்படை

*கைத்தொழில்துறைகளில் பணியாற்றுவதற்கு துறை சார்ந்த பயிற்சிபெற்ற தொழிற்படையை உருவாக்குவதற்கு,*

(மறுபக்கம் பார்க்க)

# இலங்கையில் பா.ஜ.க. கட்சி ஆரம்பிக்கிறதா?

## அண்ணாமலை கூறியது என்ன?




கச்சத்தீவு திருவிழாவிற்கு செல்வதற்கு இந்தியர்க ளுக்கு இலவச விசா நடைமுறையொன்றை இலங்கை அரசாங்கம் அமல்படுத்த வேண்டும் என, தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு பயணம் மேற்கொண்டுள்ள அண்ணாமலை, கொழும்பில் நேற்று (மே 03) ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

கச்சத்தீவில் ஆண்டுதோறும் நடைபெறும் திருவிழாவுக்கு இந்திய பக்தர்களை அனுமதிக்கும் வகையில், ஆண்டுக்கு ஒரு முறை இலவச விசா நடைமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்பதே தனது கோரிக்கை என அவர் கூறுகின்றார்.

இவ்வாறு இலவச விசா நடைமுறையொன்று அறிமுகப்படுத்தப்படும் பட்சத்தில், மீனவர்களின் பார்வை மாறிவிடும் என அவர் தெரிவித்தார்.

சில சந்தர்ப்பங்களில் இறுதித் தருணத்தில் அனுமதி மறுக்கப்படுகின்றமையினால், தாம் அரசியல் ரீதியி லான முன்நகர்வுகளை மேற்கொண்டு, பக்தர்களுக்கு அனுமதியை பெற்றுக்கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படுவதாகவும் அவர் குறிப்பிடுகின்றார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் அண்ணாமலை பல்வேறு கேள்விகளுக்கு பதிலளித்தார்.

**கேள்வி:** யாழ்ப்பாணத்தை அண்மித்த மூன்று தீவுகள் இந்தியாவினால் கையகப்படுத்தப்பட்டது. சீனாவுக்கு வழங்கப்படவிருந்த நிலையில், இறுதியில் இந்தியா அவற்றை கையகப்படுத்தியது. இவ்வாறு கச்சத்தீவுகள் கையகப்படுத்தப்படுமா?

**பதில் :** கையகப்படுத்துகின்றோம் என்ற வார்த்தை சரியில்லை என்பது என்னுடைய நிலைப்பாடு. கார ணம், அது மூன்றும் சீனாவுக்கு சென்று, சீனா தொழில் நுட்ப ஆய்வுகளில் தகுதி பெறாதமையினால், இலங்கை அரசாங்கம் இவற்றை இந்தியாவுக்கு வழங்கியது. இந்தியா வலுக்கட்டாயமாக வந்து எடுக்கவில்லை. அது கையகப்படுத்தப்படவில்லை.

**கேள்வி:** இலங்கையிலிருந்து அகதிகளாக இந்தியா வுக்கு பலர் சென்று கொண்டிருக்கின்றனர். இவர்கள் தொடர்பில் எதிர்காலத்தில் எவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்படும்?

**பதில்:** இன்றைக்கு தமிழ்நாட்டில் ஒரு லட்சத்து 43 ஆயிரம் இலங்கை அகதிகள் முகாம்களில் இருக்கின்றார்கள். அந்த ஒரு லட்சத்து 43 ஆயிரம் சகோதர, சகோதரிகளுக்கு முகாம் அனுமதிப் பத்திரம் இருக்கின் றது. நிறைய பேர் சென்னையில் வேலை செய்கின்றனர். பலர் பல பல்கலைக்கழகங்களில் படிக்கின்றார்கள். உள்நாட்டில் எந்தவித கட்டுப்பாடுகளும் இல்லை. இப்படி இருக்கும்போது, இலங்கையில் பொருளாதார சிக்கல் ஏற்பட்டதை அடுத்து, கிட்டத்தட்ட 70 பேருக்கு மேல் வந்துள்ளனர். தமிழகத்திலுள்ள ஊடகங்கள் பயன்படுத்தும் அந்த வார்த்தையை நான் பயன்படுத்த மாட்டேன்.

பொருளாதார அகதிகள் என்ற வார்த்தையை பயன் படுத்துகின்றார்கள். அதை நான் பயன்படுத்த மாட்டேன். ஒரு அவசர நிலைமையில் அவர்கள் இந்தி யாவுக்கு வருகின்றார்கள். அவர்களை மனிதாபிமானத்துடன் நடத்தவேண்டும். அதைவிடுத்து, சட்டவிரோதமாக செயற்பட்டார்கள், கடவுச்சீட்டு முறையை மீறி விட்டார்கள் என்ற கடுமையான சட்டங்கள் எப்போதும் கிடையாது. இந்திய அரசாங்கம் அதேபோன்று, பிரதமர் மோடி தெளிவாக இருக்கின்றார். இலங்கையிலிருந்து யார் இந்தியாவுக்குள் வந்தாலும், மனிதாபிமான அடிப்படையிலேயே நாம் அதனை பார்க்க வேண்டும். கடுமையான சட்ட திட்டங்களுடன் இதை பார்த்தால், பல நூற்றாண்டு கால உறவுக்கு பாதிப்பு ஏற்படும் என்பது என்னுடைய பார்வை.

**கேள்வி:** உங்களின் கருத்து அகதிகளை இந்தியாவுக்குள் வரவேற்கும் வகையில் இருக்கின்றதை போன்று தோன்றுகின்றது?

**பதில்:** வரவேற்கும் வகையில் இருக்கின்றது என்று சொல்வதை விட, ஒரு நாட்டை விட்டு யாருமே போக வேண்டும் என விரும்ப மாட்டார்கள். ஒரு வீட்டை விட்டு, சொந்தக்காரர்களை விட்டு, இருக்கின்ற இடத்தை விட்டு செல்ல யாருமே விருப்பப்பட மாட்டார்கள். அதையெல்லாம் தாண்டி, படகில் ஆபத்தை யும் கடந்து வருகின்றார்கள் என்றால், அவர்களுக்கு இருக்கக்கூடிய பெரும் அழுத்தத்திற்கு மத்தியில் அவர்கள் வெளியில் வாருகின்றார்கள். பாகிஸ்தான், வங்கதேச எல்லைகளிலிருந்து வருகின்றவர்கள், பாஸ் போர்ட் பிரச்னைகள் போன்றவற்றினால் வருபவர்களை ஒவ்வொரு வாரமும் அவர்களுடைய எல்லைக்குள் நாங்கள் அனுப்புகின்றோம். எனினும், இந்தியா - இலங் கைக்கு இடையில் அந்த மாதிரி யான கடுமையான நடவடிக்கைகள் எடுக்காமல், ஒரு மனிதாபிமான விதத்திலேயே அதனை இந்தியா பார்க்கின்றது. ஏனைய நாடுகளை விடவும், எமது நாடுகளுக்கு இடையிலான உறவு முழுமையாக வேறுபட்டது.

**கேள்வி:** யுத்தக் காலத்தில் வருகைத் தந்த அகதிக ளுக்கு வழங்கப்பட்ட சலுகைகள், இந்த நெருக்கடி காரண மாக வருகைத் தரும் அகதிகளுக்கு கிடைக்குமா?

**பதில்:** அது கொள்கை ரீதியிலான முடிவு. அதற்கு நான் பதில் சொன்னால் சரியாக இருக்காது. அது மத்திய அரசு மற்றும் தமிழக மாநில அரசு ஆகியவற்றின் கொள்கை ரீதியிலான முடிவு. என்னை பொருத்த வரை இந்த பொருளாதார நெருக்கடி விரைவில் வழமைக்கு வந்து விடும். அவர்கள் தொடர்ந்து வந்து கொண்டிருப் பார்கள் என நான் பார்க்கவில்லை. வந்தால் கூட என்ன பண்ண போறோம். மனிதாபிமான ரீதியில் அவர்களை நடத்த வேண்டும். எந்த மாதிரியான சலுகைகள் கொடுக்க வேண்டும் என்பது கொள்கை ரீதியிலான தீர்மானம். காத்திருந்து பார்க்க வேண்டும்.

**கேள்வி:** கடந்த காலங்களில் இந்தியா மற்றும் இலங்கை மீனவர்களுக்கு இடையில் மோதல் இடம் பெற்றது. இரண்டு உயிர்கள் காவுக் கொள்ளப்பட்டன. இனிவரும் காலங்களில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாது தடுத்துக்கொள்ள முடியுமா?

**பதில்:** 2017ம் ஆண்டிலிருந்து இரண்டு நாடுகளுடைய மீன் வளத்துறை அமைச்சகத்தின் செயலாளர்கள் மற்றும் வெளிவிவகார அமைச்சகத்தின் செயலாளர்கள் 6 மாதங்களுக்கு ஒரு முறை இரண்டு நாடுகளின் செயலாளர்களும் கலந்துரையாடுகின்றோம். 6 மாதங்களுக்குள் இருக்கின்ற பிரச்சினைகளை தீர்த்து வருகின்றோம். மீனவர்கள் இதை வேண்டும் என்றே பண்ணுறார்கள் என்பதை விட, கையை தாண்டி செல்கின்றது. எங்களு டைய எல்லையில் கடற்படையாக இருக்கலாம். அல்லது கடல் பாதுகாப்பு பிரிவாக இருக்கலாம். இரண்டு தரப்பும் சிறந்த முறையில் பணியாற்றுகின்றார்கள். இரண்டு நாடுகளுக்கு இடையில் ஒன்றிணைந்த கலந்துரையாடல் நடத்தப்பட்டு வருகின்ற நிலையில், இரு நாடுகளும் துப்பாக்கி சூடு நடத்துவதில்லை. படகுகள் சேதமாகுவதில்லை. மீனவர்களுக்கு உயிர் சேதம் ஏற்படுவதில்லை. அனைத்து பிரச்னைகளையும் 6 மாதங்களுக்கு ஒரு முறை தீர்க்கின்றோம்.

கேள்வி: மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தப்படுவதில்லை என கூறுகின்றீர்கள். ஆனால், இலங்கை கடற்படை தாக்குதல் நடத்துவதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிடுகின்றன. கடந்த காலங்களிலும் செய்திகள் வெளியாகியிருந்தன

பதில்: குறிப்பாக தற்போது அவ்வாறு இல்லை. ஒன்று இரண்டு சம்பவங்கள் நடக்கும், ஏனென்றால் நாம் மனிதர்கள். மனிதர்களிடம் தவறுகள் நடக்கும். நாம் அனைவரும் தவறு செய்கின்றோம். எனினும், நாளாந்தம் செய்கின்றார்கள், வாரம் வாரம் செய்கின்றார்கள் என்ற நிலைமை இரண்டு பக்கம் இல்லை. இதை பெரிய விசயமாக பார்க்க வேண்டாம். எல்லை தாண்டி சென்றிருக்கின்றார்கள். பேசிக் கொண்டிருக்கின்றோம். அதேபோன்று, இலங்கையிலிருந்து வருகின்றவர்களையும் மனிதாபிமானமாக நடத்த வேண்டும். இந்தியா இதை அரசியல் ரீதியாக பார்க்காது.

இதேவேளை, இலங்கை வாழ்கின்ற இந்திய வம்சாவளித் தமிழர்களுக்கு ஓ.சி.ஐ அனுமதியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

பாஜக இதற்கான முன்நகர்வுகளை நடத்தும் என்பதை தான் உறுதியாக கூறுகின்றேன் என அண்ணாமலை தெரிவித்தார்.

இலங்கையில் தமது கட்சியை ஆரம்பிப்பதற்கான எண்ணம் தமக்குக் கிடையாது என பாஜகவின் தமிழக தலைவர் அண்ணாமலை தெரிவித்தார்.

பாஜக எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சமயம் சார்ந்த அரசியலில் ஈடுபடாது என கட்சியின் அங்கத்துவ பட்டியலில் 4வது சரத்தில் நாங்கள் தெளிவாக கூறியுள்ளோம் என அவர் பதிலளித்தார்.

## வடக்கு - கிழக்கு - மலையகம்....

கிளிநொச்சி மாவட்டத்தின் கல்விக் கட்டமைப்பிலும் மாற்றங்களைச் செய்யவேண்டும்.

பாடசாலை மட்டத்திலேயே மாவட்டத்தில் அவசியமான கைத்தொழில்கள் தொடர்பான அறிமுகத்தையும், அந்தந்தத் துறைகளில் பணியாற்றுவதற்கான திறன்களை விருத்தி செய்வதற்கான கற்கைநெறிகள் தொடர்பான வழிகாட்டல்களையும் மாணவர்களுக்கு வழங்கி அந்தந்தத் துறைகளில் அவர்களை ஆற்றுப்படுத்தவேண்டும்.

குறிப்பாக, க.பொ.த. சாதாரணதரம் மற்றும் உயர்தரத்தில் தேர்ச்சிபெறத் தவறும் மாணவர்களை இந்தக் கைத்தொழில்களோடு சம்பந்தப்பட்ட திறன் விருத்திப் பயிற்சிகளைப் பெறுவதற்கு மாவட்டத்திலேயே காணப்படும் தொழிற்பயிற்சி நிறுவனங்களில் இணைந்து பயற்சிபெற ஊக்குவிக்கலாம். உயர்தரத்தில், மாவட்டத்தில் உள்ள யாழ் பல்கலைக்கழகத்தின் விவசாயத்துறை, தொழில்நுட்பத்துறை மற்றும் பொறியியல் துறைகளில் இணைந்து மாவட்டத்துக்கு அவசியமான கைத்தொழில் துறைகளுக்கான திறன்களை விருத்திசெய்து வேலைவாய்ப்புக்களையும் பெற்றுக்கொள்வதற்கு மாணவர்களை வழிப்படுத்த வேண்டும்.

இவ்வாறு, மாவட்டத்தின் பிரதான உற்பத்தித்துறையாக இருக்கும் விவசாயம் உட்பட, கால்நடை, கடற்றொழில்துறைகளை மேம்படுத்தி அவைசார்ந்த பெறுமதிசேர் உற்பத்திகளை மேற்கொள்வதற்கான கைத்தொழில்களை உருவாக்கி, கைத்தொழில்துறை வளர்ச்சிக்கு அவசியமான திறன்மிக்க தொழிற்படையை வழங்கும் வகையில் கல்விக் கட்டமைப்பை ஒழுங்குபடுத்துவதன் மூலம், ஒட்டுமொத்தமாக கிளிநொச்சி மாவட்டத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்த முயற்சிக்கலாம்.

### எல்லைக் கிராமங்கள்

கிளிநொச்சி மாவட்டம் வடக்கின் மத்தியில் அமைந்திருக்கும் ஒரு மாவட்டம் என்ற வகையில், கிளிநொச்சியுடன் எல்லைகளைப் பகிர்கின்ற வறுமையில் உயர்வான இருக்கும் அடுத்த மாவட்டமான முல்லைத்தீவுக்கும் இந்த அணுகுமுறையிலான செயற்பாடுகளை விரிவாக்க முடியும். கிளிநொச்சியின் கிழக்காக விசுவமடுவும், தெற்காக முறிகண்டி, மாங்குளம் மற்றும் தென்மேற்குப் பகுதியில் துணுக்காய் என கிளிநொச்சியுடன் எல்லைகளைப் பகிரும் முல்லைத்தீவு மாவட்டத்தின் சில பகுதிகள் ஊடாக இந்த அபிவிருத்தி விரிவாக்கப் பணிகளை முல்லைத்தீவு மாவட்டத்துக்கும் விரிவாக்க முடியும்.

அதேபோன்று, வறுமையில் 5வது மாவட்டமாக இருக்கும் யாழ்ப்பாணத்திலும், அதிகளவு பின்தங்கிய பிரதேசமாக இருக்கும் தென்மராட்சிப் பகுதி கிளிநொச்சிக்கு வடக்காக பச்சிலைப்பள்ளியுடனும் மறுபுறம் பூநகரியுடனும் எல்லைகளைப் பகிர்வதாலும், வடமராட்சிக் கிழக்குப் பகுதி பச்சிலைப்பள்ளி மற்றும், கண்டாவளையுடன் எல்லைகளைப் பகிர்வதாலும், கிளிநொச்சியின் வறுமை ஒழிப்பு பொறிமுறைகள் இவற்றினூடாக யாழ் மாவட்டத்துக்கும் விரிவாக்கப்படலாம்.

இந்த அணுமுறையிலான வறுமை ஒழிப்புச் செயற்பாடுகள் வெற்றியளித்து உரிய பெறுபேறுகளைத் தருமிடத்து, வடக்குக்கு வெளியே கிழக்கு மாகாணத்தில் வறுமையில் 3ம், 4ம் நிலைகளிலிருக்கும் மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களுக்கு, பின்னர் மலையகப் பிரதேசங்களுக்கும் இந்த அணுகுமுறையை அந்தந்தப் பிரதேசங்களின் கள யதார்த்தங்களுக்கேற்ப மாற்றியமைத்து நடைமுறைப்படுத்தும் முயற்சிகளை மேற்கொள்ளலாம். ●



# புலமைச் சிகரம் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

கல்வி tv CHANNEL

36) பானங்கள் தயாரிக்கப் பயன்படும் வேர் எது?
1) வில்வம் வேர் 2) சாத்தாவாரி வேர் 3) வெட்டி வேர்

37) நிலத்தில் குப்பைகளை எரிப்பதால் இறக்கும் உயிரினம் எது?
1) மண்புழு 2) பறவைகள் 3) மீன்

38) தச்சன் பயன்படுத்தும் உபகரணங்களில் ஒன்று
1)  2)  3) 

39) கைக்குட்டையில் பூ, பூக்காம்பு என்பவற்றைத் தைப்பதற்குப் பயன்படும் தையல்
1) கம்பளித் தையல் 2) சங்கிலித் தையல் 3) அடிப்படைத் தையல்


40) இலங்கைக்கே உரித்தான பறவையாக அமையாதது?
1) காட்டுக்கோழி 2) சபன் கோழி 3) பச்சைக்கிளி

41) அயடீன் குறைபாட்டால் ஏற்படும் நோய்
1) ஸ்கேவி 2) குருதிச்சோகை 3) தொண்டைக்கழலை

42) பின்வருவனவற்றில் பாதுகாப்பற்ற சந்தர்ப்பம் எது?
1) கூரிய உபகரணங்களைக் கையில் ஏந்தியவாறு ஓடுதல்
2) பாதையின் வலது பக்கத்தால் செல்லுதல்
3) முகக் கவசம் அணிந்து செல்லுதல்

43) கொப்பளிப்பான் நோயின் நோய்க்காவிகள்
1) நுளம்பு 2) அசுத்தமான உணவு 3) ஆட்கள்

44) எண்ணெய், கொழுப்பு அடங்கியுள்ள உணவுகளை அதிகம் உண்ணுவதால் ஏற்படும் நோய்
1) நீரிழிவு 2) சீதபேதி 3) இதய நோய்

45) 


படத்தில் காட்டியவாறு நீரைச் சூடாக்கும் போது உடனடிய நிகழ்வது
1) நீர் ஆவியாகும் 2) நீர் சூடாகும் 3) நீர் குறையும்

46) நீராவி மூலம் பெறத்தக்க பயன் எது?
1) நீரைக் குளிரச் செய்தல் 2) சோறு சமைத்தல் 3) மூலிகை அவித்தல்

47) மாசடைந்த நீரை நுகர்வதால் ஏற்படும் நோய் எது?
1) டெங்கு 2) ஈரலழற்சி 3) சின்னமுத்து

48) சேதனப் பசளையாகப் பயன்படுத்துவது
1) யூரியா 2) மாட்டெரு 3) அமோனியா

49) எனது பாடசாலை காலியில் அமைந்துள்ளது. எனது பாடசாலை அமைந்துள்ள மாகாணம் எது?
1) வடமாகாணம் 2) கிழக்கு மாகாணம் 3) தென் மாகாணம்

50) காந்தம் கவர முடியாத பொருள் எது?
1) குண்டூசி 2) நெகிழி 3) இரும்பாணி

51) பற்சில்லுகளைக் கொண்ட உபகரணம்
1) ஒற்றைச்சில்லு வண்டி 2) மின்விசிறி 3) துவிச்சக்கரவண்டி

52) தொடர்பாடலுக்குப் பயன்படும் பிரசித்தி பெற்ற அச்சு ஊடகம்
1) வானொலி 2) இணையம் 3) பத்திரிகை

53) மின்னஞ்சல் அனுப்புவதற்குத் தேவையான சாதனம் அல்லாதது
1) கணினி 2) மடிக்கணினி 3) வானொலி

54) சிகிரியா அமைந்துள்ள மாவட்டம் எது?
1) கண்டி 2) அநுராதபுரம் 3) மாத்தளை

55) பௌத்த நூல்களை பாளி மொழியிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழி பெயர்த்தவர்
1) வண.எஸ்.மஹிந்த 2) கலாநிதி ஆனந்த குமாரசுவாமி 3) C.W.W.கன்னங்கரா

56) காற்பந்து விளையாட்டுப் போட்டியில் ஓர் அணியில் பங்குபற்றும் வீரர்களின் எண்ணிக்கை யாது?
1) 10 பேர் 2) 7 பேர் 3) 11 பேர்

57) கடதாசிகளை மடித்து உருவங்கள் அமைத்தலை எவ்வாறு அழைப்பர்?
1) கொலாஜ் 2) ஓரிகாமி 3) அலப்பறை

58) உடலுக்குச் சக்தி தரும் உணவு
1) பருப்பு 2) பாண் 3) வல்லாரை

59) குறைவான நீர் அருந்துவதால் ஏற்படும் அசௌகரியம் அல்லாதது
1) சிறுநீரின் நிறம் கடும் நிறமாதல்
2) தோல் உலர்தல்
3) சிறுநீரகங்கள் ஆரோக்கியமாதல் **(30 புள்ளிகள்)**

60) பாடசாலை விடுமுறைக் காலத்தில் நான் சென்ற கல்விச் சுற்றுலா என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக.
(ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

## விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 36. | 3 | 37. | 1 | 38. | 1 |
| 39. | 2 | 40. | 3 | 41. | 3 |
| 42. | 1 | 43. | 3 | 44. | 3 |
| 45. | 2 | 46. | 3 | 47. | 2 |
| 48. | 2 | 49. | 3 | 50. | 2 |
| 51. | 3 | 52. | 3 | 53. | 3 |
| 54. | 3 | 55. | 2 | 56. | 3 |
| 57. | 2 | 58. | 2 | 59. | 3 |

60. பொருத்தமான வாக்கியங்கள்

கல்வி tv CHANNEL-1

**05.05.2022**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | சங்கீதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | வரலாறு |
| 05.00 | A/Lவினாத்தாள் | சைவசமயம் கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| | மறு ஒளிபரப்பு | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சங்கீதம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

கல்வி tv CHANNEL - 2

**05.05.2022**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கதை |
| 09.00 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-03 | சைவசமயம் |
| 10.30 | தரம்-03 | அழகியல் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | கணிதம் - paper |
| 01.15 | தரம்-05 | சைவசமயம் |
| 02.00 | தரம்-05 | Gentral knowledge |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 06.00 | தரம்-03 | சைவசமயம் |
| 06.45 | தரம்-03 | அழகியல் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | கணிதம் - paper |
| 09.00 | தரம்-05 | சைவசமயம் |
| 09.45 | தரம்-05 | Gentral knowledge |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சைவசமயம் |
| 12.30 | தரம்-03 | அழகியல் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | கணிதம் - paper |
| 02.45 | தரம்-05 | சைவசமயம் |
| 03.30 | தரம்-05 | Gentral knowledge |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |



## மாணவர்களின் வருகை வீழ்ச்சி

மட்டக்களப்பு, மே 05

நோன்பு கால விடுமுறையின் பின்னர் முதலாம் தவணைக்காக முஸ்லிம் பாடசாலைகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டன.

அந்தவகையில், மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் நேற்று மாணவர்களின் வருகை வீழ்ச்சியடைந்துள்ளது.

நேற்று முன் தினம் நோன்புப் பெருநாள் தினம் என்பதால் இன்று பாடசாலைக்கு குறைவான மாணவர்கள் சமூகமளித்துள்ளதாகவும் ஆசிரியர்களின் வரவு கணிசமான அளவில் இருந்ததாகவும் அதிபர்கள் தெரிவித்தனர். (அ)

# சட்டவிரோதமாக காடுகள் அழிப்பு

### அரச அதிகாரிகள் தடுத்து நிறுத்தினர்





மட்டக்களப்பு, மே 05

சட்டவிரோதமாக காடுகள் அழிக்கப்பட்டு கட்டடங்கள் அமைக்கும் வேலைத்திட்டங்கள் இடம்பெற்றதை தொடர்ந்து கிராம சேவையாளர் சம்பவ இடத்துக்கு விரைந்து உடனடியாக கட்டட வேலைகளை நிறுத்தி அங்கிருந்து செல்லுமாறு உத்தரவிட்டார்.

இச்சம்பவமானது நேற்று மட்டக்களப்பு - செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட களுவன்கேணி கடற்கரையோரப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

ஏறாவூர் பகுதியைச் சேர்ந்த ஒரு சிலர் இணைந்து குறித்த காடழிப்பு நடவடிக்கை மற்றும் இயற்கை தோணாக்களை அடைப்பது, அனுமதி இல்லாமல் கட்டடங்களை அமைப்பது போன்ற நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றமை தெரியவந்துள்ளது.

காடழிப்பு சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு ஏறாவூர் பற்று செங்கலடி பிரதேச சபையின் உறுப்பினர் வனேந்திரன் சுரேந்திரன் மற்றும் பிரதேச இளைஞர்கள் ஒன்றிணைந்து விடயம் தொடர்பாக பார்வையிடச் சென்றுள்ளனர்.

இதன்போது சட்டவிரோதமான முறையில் அங்கு இடம்பெறும் செயல்பாடுகளை அவதானித்து இவர்கள் அரசியல்வாதிகள், உயர் மட்ட அரச அதிகாரிகள் போன்றவர்களை தொடர்புகொண்டு வினவிய போது, இது தொடர்பாக யாருக்கும் தெரியாது எனவும், குறித்த இடத்தில் சட்டவிரோதமான முறையில் இச்செயற்பாடு இடம்பெறுவதாகவும் பிரதேச சபை உறுப்பினர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த இடத்தில் பயங்கரவாதச் செயற்பாடு ஒன்றுக்கு குறித்த வேலைத்திட்டம் இடம்பெறுவதாக பிரதேச சபை உறுப்பினர் சுரேந்திரன் சுட்டிக் காட்டியதோடு வேலைத் திட்டங்களை உடன் நிறுத்தவேண்டும் என அதிகாரிகளிடம் தொலைபேசி மூலம் கோரிக்கை விடுத்தார்.

சம்பவ இடத்திற்கு உடன் வருகை தந்த களுவன்கேணி பிரதேசத்தின் கிராமசேவையாளர் குறித்த சட்டவிரோத வேலைத்திட்டங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதாகவும், கட்டடம் அமைத்து கொண்டிருப்பவர்களை உடனடியாக கட்டட வேலைகளை நிறுத்தி அங்கிருந்து உடனடியாகச் செல்லுமாறும் கூறி அனைவரையும் அங்கிருந்து வெளியேற்றினார்.

குறித்த பகுதிகளில் தொடர்ச்சியாக போலி ஆவணங்களை தயாரித்து இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெறுவதாக குற்றம்சாட்டப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சாய்ந்தமருதில் இரவில் துர்நாற்றம்தொடர்கிறது

### காரணம் கண்டறிவதில் இழுபறி

மட்டக்களப்பு, மே. 05

சாய்ந்தமருதில் சில நாட்களாக மாலை முதல் அதிகாலை வரை பலத்த துர்நாற்றம் வீசிவருவதாக மக்கள் தொடர்ந்தும் விசனம் தெரிவிக்கின்றனர். இது தொடர்பில் கருத்து தெரிவித்த பிரதேசவாசிகள் இந்த துர்நாற்றம் சாய்ந்தமருது பொலிவேரியன் கிராமத்தில் அமையப்பெற்றிருக்கும் விலங்கறுமனையிலிருந்து வருவதாகவும், மாட்டின் என்புகள் மற்றும் மாட்டின் தோலை தீயிட்டு அழிப்பதனால் வரும் துர்நாற்றம் என்றும் தெரிவித்ததுடன்



இந்த துர்நாற்றம் காரணமாக குடியிருப்பு பிரதேசங்களில் நாங்கள் பலத்த சங்கடங்களை அனுபவிப்பதாகவும், குறித்த பிரதேசத்திலிருந்து துர்நாற்றம் காரணமாக இடம்பெயறவேண்டிய நிலை உள்ளதாகவும் இது தொடர்பில் சுகாதார அதிகாரிகள், கல்முனை மாநகர சபையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டனர். சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்திலும் பொதுமக்களினால் முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் ஊடகங்களும், பொதுமக்களும் சுகாதாரத்துறையினருக்கு எடுத்துரைத்ததுடன் குறித்த பிரச்சினையின் அவசர நிலையறிந்து துர்நாற்றம் வருவதாக பொதுமக்கள் குற்றம்சுமத்திய விலங்கறுமனைக்கு நேற்று நண்பகல் திடீரெனெ கள விஜயம் மேற்கொண்டு கல்முனை மாநகர பிரதம சுகாதார வைத்திய அதிகாரி எம். ஜே. கே.எம். அர்சத் காரியப்பர், சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி யூ.எல்.எம். நியாஸ், பொதுசுகாதார பரிசோதகர்கள் அடங்கிய குழுவினர் பார்வையிட்டனர்.

இந்த விஜயம் மேற்கொள்ளப்பட்ட நேரம் அந்த விலங்கறுமனையில் பாரியளவிலான துர்நாற்றம் வீசுவதற்கான எவ்வித காரணங்களும் இல்லாதிருந்ததையும் மாடுகளை அறுக்கும் இடம் சுத்தமாக இருந்ததுடன் உப்பு மற்றும் இரசாயன பதார்த்தங்களை கொண்டு தோலை பதப்படுத்தி வைத்திருந்ததையும், குவித்து வைத்திருக்கும் என்புகளை இயந்திரங்களை கொண்டு தூளாக்கி வைத்திருந்ததையும் அங்கு தோல்கள் வெயிலில் உளறவிடப்பட்டிருந்ததையும் அவதானிக்க முடிந்தது.

நீண்டநேரமாக ஆய்வு செய்த சுகாதாரத்தரப்பினர் விலங்கறுமனை நடவடிக்கை தொடர்பில் பல்வேறு ஆலோசனைகளை விலங்கறுமனை ஊழியர்களுக்கு இதன்போது வழங்கினர்.

## யானை தாக்கி ஒருவர் மரணம்

மட்டக்களப்பு, மே 05

கொக்கட்டிச்சோலை - சாமந்தியாறு பகுதியில் யானை தாக்கி ஒருவர் மரணமான சம்பவம் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் கொக்கட்டிச்சோலை கிராமத்தினைச் சேர்ந்த 5 பிள்ளைகளின் தந்தையான வெள்ளத்தம்பி குமரகுரு (வயது 72) என்பவரே உயிரிழந்துள்ளார்.

நேற்று முன் தினம் இரவு மூன்று யானைகள் குறித்த பகுதிக்குள் நுழைந்து, வீட்டில் இருந்த மரங்களையும், பயிர்களையும் சேதப்படுத்திவிட்டு, குறித்த நபரின் வீட்டின் முன்னால் உள்ள காணியில் உலாவியுள்ளது.

இதன்போது, குறித்த நபர் வீட்டை விட்டு வெளியில் சென்றபோது, யானை தாக்கியுள்ளது. இதில் சம்பவ இடத்திலேயே குறித்த நபர் மரணமடைந்தார். (அ)





# முத்தமிழ் வித்தகரின் ஜனன தினம்

மட்டக்களப்பு, மே. 05

உலகின் முதல் தமிழ்ப் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் 130ஆவது ஜனன தின நிகழ்வு, மட்டக்களப்பில் நேற்று முன்தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாநகர சபையால் ஏற்பாடு செய்யப்பட்ட இந் நிகழ்வு, சுவாமி விபுலானந்த அடிகளாரின் உருவச் சிலை அமைந்துள்ள நீரூற்றுப் பூங்கா வளாகத்தில், மட்டக்களப்பு மாநகர சபையின் பிரதி ஆணையாளர் உ.சிவராஜா தலைமையில் நடை பெற்றது.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக கலந்துகொண்ட மட்டக்களப்பு மாநகர சபையின் பிரதி மேயர் க.சத்தியசீலன், சுவாமியின் திரு உருவ சிலைக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.

அதனைத் தொடர்ந்து, மட்டக்களப்பு வின்சென்ட் மகளிர் தேசிய பாடசாலை மாணவிகளால் "வெள்ளை நிற மல்லிகையோ" பாடல் பாடப்பட்டதுடன், அதிதிகளினால் நினைவுப் பேருரைகளும் ஆற்றப்பட்டு, ஜனன தின நிகழ்வுகள் அனுஷ்டிக்கப்பட்டன. (அ)

# அதிக எடை மற்றும் உடற்பருமன் ஆபத்தான போக்கில் அதிகரிப்பு

## ஆரோக்கியமற்ற உணவுச் சந்தைகள் டிஜிற்றல் வாழ்க்கை முறையால் கேடு

ஜெனிவா, மே 05

உலக சுகாதார நிறுவனத்தின் ஐரோப்பியப் பிராந்தியத்தில் அதிக உடல் எடை மற்றும் உடல்பருமன் ஆபத்தான போக்கில் அதிகரித்து வருகிறது என்று எச்சரிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

ஐரோப்பியக் கண்டத்தில் ஆண்டு தோறும் 12 இலட்சம் மரணங்களுக்கு உடல்பருமன் மற்றும் உடல் எடை அதிகரிப்புக் காரணமாகின்றது. அமெரிக்கா தவிர்ந்த உலகின் ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடுகையில் ஐரோப்பாவில் வளர்ந்தோரில் கால்பங்கினர் உடல் பருமனால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வெவ்வேறு வகையான 13 புற்று நோய்களுக்கும் இருதய நோய்கள் பலவற்றுக்கும் காரணமான உடற் பருமன் ஆண்டு தோறும் 20 இலட்சம் புற்று நோய்களை ஏற்படுத்துகின்றது என்று தெரிவிக்கப்படுகிறது. உடல் எடை உடற் பருமன் கடந்த ஐந்து தசாப்தங்களில் 138 வீதத்தால் உயர்ந்துள்ளது. ஒரு தொற்று நோயின் கணக்கில் அது பெருகிவருகிறது என்று உலக சுகாதார நிறுவனம் ஓர் அறிக்கையில் தெரிவித்திருக்கிறது. இனிப்புப் பானங்கள், ஆரோக்கியமற்ற உணவு வகைகளை வீடுகளுக்கு நேரடியாக விநியோகிக்கும் ஒன்லைன் உணவு சந்தைகள், குழந்தைகளிடையே ஒன்லைன் விளையாட்டுகள், சமூகலைத் தளங்கள் போன்றவை உட்பட ஐரோப்பாவின் உச்சபட்சமான டிஜிற்றல் வாழ்க்கை முறைச் சமூகம் போன்ற பலவற்றைக் காரணங்களாகக் காட்டியுள்ள அந்த அறிக்கை, உடல் பருமனைத் தடுப்பதற்கு அவசரமான கொள்கை மாற்றங்கள் அவசியம் என்று தெரிவித்துள்ளது.

அதிக இனிப்புக் கலந்த பானங்கள் உட்பட குழந்தைகளை எட்டுகின்ற ஆரோக்கியமற்ற உணவுகள் மீது உச்ச வரி விதிப்பது உட்பட உணவுப் பழக்க வழக்கங்களை மாற்றுகின்ற திட்டங்களை சுகாதார அமைப்பு பரிந்துரைத்திருக்கிறது.

2016 ஆம் ஆண்டுத் தரவுகளின் படி ஐரோப்பாவில் வளர்ந்தவர்களில் 59 வீதமானவர்களும் மூன்றில் ஒரு சிறுவர்களும் உடல்பருமனால் பாதிக்கப்பட்டுள்ளனர். கொரோனாத் தொற்று நோய் முடக்கங்களும் அது தொடர்பான வாழ்வு முறை மாறுதல்களும் உடல் பருமன் வேகமாக அதிகரிப்பதற்குக் காரணமாகியுள் ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

உலக சுகாதார நிறுவனத்தின் ஐரோப்பியப் பிராந்தியம் என்பது ஐரோப்பா, மத்திய ஆசியா அடங்கலாக 53 நாடுகளை உள்ளடக்கிய தாகும்.



# உக்ரைனில் விபத்து; 17 பேர் உயிரிழப்பு!

கீவ், மே 05

உக்ரைன் மேற்கு ரிவ்னே பிராந்தியத்தில் எரிபொருள் ஏற்றிச் சென்ற லொறி - பயணிகள் பேருந்து மற்றும் கார் என்பன மோதி இடம்பெற்ற கோர விபத்தில் 17 பேர் பலியாகினர்.

இந்த விபத்தில் மேலும் பலர் படுகாயமடைந்துள்ளனர். இதனால், உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாலை நாட்டு மக்களுக்கு வழமையாக ஆற்றும் நாளாந்த உரையில் இந்த விபத்தை சுட்டிக்காட்டிய உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி, விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்தார்.

அத்துடன், இந்த விபத்து உக்ரைனுக்கு எதிரான ரஷ்ய போருடன் நேரடி தொடர்புடையதாகத் தெரியவில்லை என்றும் ஜெலன்ஸ்கி தனது உரையில் கூறினார். (ஐ)



# உக்ரைன் போரை உடன் நிறுத்துங்கள்!

## இந்திய பிரதமர் அழைப்பு

கோபன்ஹாகன், மே 05

உக்ரைன் போர் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என ஐரோப்பிய நாடுகளுக்கான உத்தியோகபூர்வ பய ணத்தின்போது இந்திய பிரதமர் நரேந்திர மோடி வலி யுறுத்தியுள்ளார்.

ஜேர்மனி பயணத்தை முடித்துக் கொண்டு நேற்று முன்தினம் டென்மார்க் சென்ற இந்தியப் பிரதமர் மோடி, அங்கு வைத்து இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார்.

டென்மார்க் பிரதமரை சந்தித்துப் பேசிய பின்னர் செய்தியாளர்களை சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

“உக்ரைன் போர் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். பிரச்னைகளுக்கு பேச்சு மூலம் தீர்வு காணப்பட வேண்டும். உக்ரைனில் நிலவும் மனிதாபிமான பிரச்னை கவலையை ஏற்படுத்துகிறது. ஐ. நா. விதிகள், சர்வதேச விதிகள் உள்ளிட்டவற்றுக்கும் மற்ற நாடுகளின் இறையாண்மைக்கும் அனைத்து நாடுகளும் மதிப்பளிக்க வேண்டும் - என்றார்.

அத்துடன், ஐ. நா. பாதுகாப்பு சபையில் 2025-2026 காலகட்டத்தில் டென்மார்க் நிரந்தரமற்ற உறுப்பு நாடாக இணைவதற்கு இந்தியா ஆதரவளிக்கும் என பிரதமர் மோடி உறுதியளித்தார். (ஐ)

# வடகொரியா மீண்டும் ஏவுகணை பரிசோதனை!




சியோல், மே 05

வடகொரியா நேற்று முன்தினம் மீண்டும் ஏவுகணை பரிசோதனை செய்துள்ளதாக தென்கொரியா தெரிவித்துள்ளது.

வடகொரியா அடிக்கடி ஏவுகணைகளை ஏவி வருகின்றது. அமெரிக்கா, தென்கொரியா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகளை அச்சுறுத்தும் வகையிலேயே இந்த சோதனைகளில் வடகொரியா ஈடுபட்டு வருகிறது. மேலும், தங்கள் ஆயுத பலத்தை உலக நாடு களுக்கு வெளிப்படுத்தி வருகிறது.

இதனிடையே, இந்த ஆண்டு தொடக்கம் முதல் வடகொரியா தனது ஏவுகணை சோதனையை தீவிரப்படுத்தியுள்ளது. தொலைதூர இலக்கை துல்லியமாக தாக்கி அழிக்கும் ஏவுகணை, ஹைபர் சொனிக் ஏவுகணை என பல்வேறு வகையிலான ஏவுகணைகளை வடகொரியா பரிசோதித்து வருகிறது.

இந்நிலையில், வடகொரியா நேற்றுமுன்தினம் மீண்டும் ஏவுகணை பரிசோதனை செய்துள்ளதாக தென்கொரியா தெரிவித்துள்ளது.

தலைநகர் பியோங்யொங் அருகே உள்ள சுனன் என்ற நகரில் இருந்து பாலிஸ்டிக் ஏவுகணை ஏவப்பட்டதாகவும், அது கிழக்குக் கடல் (ஜப்பான் கடல்) நோக்கி சென்றதாகவும் தென்கொரியா தெரிவித்துள்ளது.

ஜப்பானின் கடலோர காவல்படையும் வடகொரியா “பாலிஸ்டிக் ஏவுகணையை” ஏவியதை உறுதிப்படுத்தியுள்ளது. (ஐ)

# நெருப்பு அலைகளை கக்கும் சூரியனின் ஒளிப்படம் வெளியீடு


நியூயோர்க், மே 05

கொந்தளிக்கும் எரிமலைக் குழம்பைப்போல நெருப்பு அலைகளை வெளியிடும் அதிர்ச்சி சூரியனின் ஒளிப்படத்தை நாஸா வெளியிட்டுள்ளது.

விண்வெளியில் தொடர்ந்து ஆய்வுகளை செய்து வரும் நாஸா கடந்த சில வாரங்களாக சூரியனிலிருந்து அதிகப்படியாக கதிர்கள் வெளியாகின்றன என்றும் அதில் வெளிப்படும் வெப்பத்தின் அளவும் அதிகரித்திருக்கிறது என்றும் தெரிவித்து சூரியனின் புதிய புகைப் படத்தை வெளியிட்டுள்ளது.

அதில், சூரியனிலிருந்து வெளியாகும் நெருப்புப் பிளம்புகளின் அளவு அதிகரித்துக் காணப்படுகிறது.

மேலும், தற்போது இந்தப் பிளம்புகளால் வெளியாகும் அதிகப்படியான கதிர்களால் மனிதர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்றும் ஒருவேளை நேரடியாக பூமிக்கு அந்தக் கதிர்கள் வந்தால் வானலை தகவல் தொடர்புகள், சர்வதேச விண்வெளி நிலையத்தில் உள்ள விண்கலன்கள் மற்றும் விண்வெளி வீரர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தலாம் என நாஸா தெரிவித்துள்ளது. (ஐ)



# குஜராத் ரைட்டன்ஸை வீழ்த்தியது பஞ்சாப்!



மும்பை, மே 05

குஜராத் ரைட்டன்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் பஞ்சாப் கிங்ஸ் அணி 8 விக்கெட்களால் வெற்றி பெற்றது.

நடப்பு ஐ. பி. எல். தொடரில் 48ஆவது லீக் போட்டியில் குஜராத் ரைட்டன்ஸ் மற்றும் பஞ்சாப் கிங்ஸ் அணிகள் விளையாடின. முதலில் நாணயச் சுழற்சியில் வென்ற குஜராத் அணியின் தலைவர் ஹார்திக் பாண்ட்யா துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தார்.

இதன்படி, முதலில் ஆடிய குஜராத் அணியின் முன்னணி வீரர்கள் நிலைக்க தவறினர். ஒருபுறம் விக்கெட்கள் வீழ்ந்தாலும். இளம் வீரர் சாய் சுதர்சன் மட்டும் 65 ஓட்டங்கள் எடுக்க அவரின் உதவியால் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் குஜராத் அணி 8 விக்கெட் இழப்புக்கு 143 ஓட்டங்கள் எடுத்தது.

பஞ்சாப்பின் பந்துவீச்சில் கசிகோ ரபாடா பஞ்சாப் அணிக்கு 4 விக்கெட்களை கைப்பற்றினார்.

எட்டக்கூடிய இலக்கை நோக்கிக் களமிறங்கிய பஞ்சாப் கிங்ஸ் அணிக்கு வழக்கத்துக்கு மாறாக ஷிகர் தவானுடன், ஜொனி பெயர்ஸ்ரோ தொடக்கம் கொடுத்தனர்.

பெயர்ஸ்ரோ, 3ஆவது ஓவரிலேயே தனது விக்கெட்களை பறிகொடுத்து வெறும் ஓர் ஓட்டத்துடன் நடையைக் கட்டினார். பஞ்சாப் அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சியாக இருந்தாலும், அதன்பின் ஷிகர் தவானுடன் கூட்டணி சேர்ந்தார் பானுக ராஜபக்ஷ. இருவரும் சேர்ந்து அதிரடியாக அதேநேரம் பொறுமையுடனும் ஓட்டங்களை சேர்த்தனர். இந்த கூட்டணி 87 ஓட்டங்கள் சேர்த்தது. 12ஆவது ஓவரில் தான் இவர்கள் இணையை பெர்குசன் பிரித்தார்.

பனுக ராஜபக்ஷ 40 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அடுத்து லிவிங்ஸ்ரனும் ஷிகர் தவானும் இணைந்து அணியை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் சென்றனர். லிவிங்ஸ்ரன் கடைசி நேரத்தில் 10 பந்துகளில் 30 ஓட்டங்கள் குவித்தார். அவர் அடித்த 3 சிக்ஸரில் ஒன்று 117 மீற்றர் சென்றது.

இந்தத் தொடரில் அதிகதூரம் சென்ற சிக்ஸரில் இது முதல் இடம் பிடித்தது. அதேபோல், தொடக்க வீரராக இறங்கி இறுதி வரை ஆட்டமிழக்காமல் இருந்த ஷிகர் தவான் 62 ஓட்டங்கள் எடுத்தார். இறுதியில் 16 ஓவர்கள் முடிவில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை எட்டி 8 விக்கெட் வித்தியாசத்தில் பஞ்சாப் அணி வெற்றிபெற்றது. (ஐ)

# ஆஸி. அணிக்காக இங்கிலாந்தில் ஆடிய இலங்கை வம்ச வீராங்கனை!

லண்டன், மே 05

இலங்கை வம்சாவளி வீராங்கனையான ஜசிந்தா கலபட ஆராச்சி அவுஸ்திரேலிய மகளிர் உதைபந் தாட்ட அணியில் சேர்க்கப்பட் டுள்ளார். இவர் இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில் அண்மையில் களமிறங்கினார்.

20 வயதான ஜசிந்தா, அவுஸ்திரேலியாவின் டெண்டி னொங் நகரில் பிறந்தவர். கடந்த வருடம் செல்டிக் கழக மகளிர் அணிக்காக ஸ்கொட் லாந்து மகளிர் பிறீமியர் லீக்கில் விளையாடுவதற்கு ஒப்பந்தமானார்.

அவுஸ்திரேலியாவின் 17 வயதுக்குட்பட்ட மற்றும் 20 வயதுக் குட்பட்ட கனிஷ்ட தேசிய அணிகளின் முன்னாள் வீராங்கனையான ஜசிந்தா, தனது 15 ஆவது வயதில் மெல்பர்ன் நகர கழகத்துக்காக முதன்முதலில் விளையாடினார்.

அதன் பின்னர் அலாமெய்ன் கழகம் (2018), பேர்த் குளோறி (2018-2019), வெஸ்ட் ஹாம் யுனைட்டட் (2019-2020), நேபோலி (2020-2021) ஆகிய கழகங்களுக்காக விளையாடியிருந்தார்.

இங்கிலாந்தில் மகளிர் உதைபந் தாட்டத்தில் விளையாடிய முதலாவது இலங்கை வம்சாவளி வீராங் கனை என்ற பெருமையும் ஜசிந் தாவை சேருகிறது.

முன்கள வீராங்கனையான ஜசிந்தாவின் தந்தை கலபடஆராச்சி இலங்கையராவார். அவரது தாயார் இத்தாலி நாட்டைச் சேர்ந்தவர். (ஐ)






# ஐ. பி. எல். இறுதிச்சுற்று அட்டவணை வெளியீடு

மும்பை, மே 05

நடப்பு ஐ. பி. எல். தொடரில் பிளே ஓவ் சுற்று அட்டவணையை வெளியிட்டுள்ளது இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை. இதில் போட்டிகள் நடைபெறும் மைதானம் குறித்த விவரமும் வெளியிடப்பட்டுள்ளது.

ஐ. பி. எல். தொடர் கொரோனா தொற்றுப் பரவல் காரணமாக இந்த ஆண்டு மும்பை, புனே மைதானங்களில் மட்டும் நடக்கிறது.

முதல் சுற்றுப் போட்டிகளுக்கான இடங்கள் அறிவிக்கப்பட்ட நிலையில், இறுதிச் சுற்றுக்கான போட்டிகளுக்கான இடங்கள் அறிவிக்கப்படவில்லை. அந்த விவரம் இப்போது வெளியாகியுள்ளது.

மே 24 - இறுதியாட்ட தகுதி போட்டி 1 - கொல்கத்தா

மே 25 - வெளியேற்றும் போட்டி - கொல்கத்தா

மே 27 - இறுதியாட்ட தகுதி போட்டி 2 - அஹமதாபாத்

மே 29 - இறுதியாட்டம் - அஹமதாபாத்

# பங்களாதேஷுக்கு எதிரான இலங்கை அணி அறிவிப்பு!

கொழும்பு, மே 05

பங்களாதேஷுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ள இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக் கிரிக்கெட் நிறுவனம் வெளியிட்டுள்ள 18 பேர் கொண்ட இலங்கை அணிக்கு திமுத் கருணாரத்ன தலைமை தாங்குகின்றார்.

இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் 15 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் இலங்கை அணி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பங்களாதேஷ் நோக்கி புறப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அணி:

திமுத் கருணாரத்ன (அணித் தலைவர்) , கமில் மிஷார, ஒஷத பெர்னாண்டோ, அஞ்சலோ மத்தியூஸ், குசல் மெண்டிஸ், தனஞ்சயடி சில்வா, கமிந்து மெண்டிஸ், நிரோஷன் டிக்வெல்ல, டினேஷ் சந்திமால், ரமேஷ் மெண்டிஸ், சமிக்க கருணாரத்ன, சுமிந்த லக்சான், கசுன் ரஜித, விஷ்வ பெர்னாண்டோ, அசித பெர்னாண்டோ, டில்ஷான் மதுசங்க, பிரவீன் ஜயவிக்கிரம, லசித் எம்புல்தெனிய.





# ஐ. சி. சி. டெஸ்ட் தரவரிசை; அவுஸ்திரேலியா முதலிடம்!

டுபாய், மே 05

ஐ. சி. சி. வெளியிட்டுள்ள வருடாந்த டெஸ்ட் தரவரிசைப் பட்டியலில் அவுஸ்திரேலிய அணி முதலிடத்தைப் பிடித்துள்ளது.

இரண்டாவது இடத்தில் உள்ள இந்தியாவை விடவும் ஆஸி. அணி 9 புள்ளிகள் கூடுதலாக பெற்று முதலிடத்தில் உள்ளது. பட் கம்மின்ஸ் தலைமையிலான அவுஸ்திரேலிய அணி சமீபத்தில் பாகிஸ்தானை 1-0 என வீழ்த்தி டெஸ்ட் தொடரை வென்றது.

இதனால் டெஸ்ட் தரவரிசையிலும் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டியின் புள்ளிகள் பட்டியலிலும் முதலிடத்தில் உள்ளது.

தரவரிசையில் 3ஆவது இடத்தில் நியூசிலாந்தும் 4ஆவது இடத்தில் தென்னாபிரிக்காவும் 5ஆவது இடத்தில் பாகிஸ்தானும் உள்ளன. இங்கிலாந்து, இலங்கை, மேற்கிந்தியத் தீவுகள், பங்களாதேஷ், சிம்பாப்வே ஆகிய அணிகள் கடைசி 5 இடங்களில் உள்ளன.

மே 2019 முதல் நடைபெற்ற டெஸ்ட் தொடர்களின் அடிப்படையில் தரவரிசை நிர்ணயிக்கப்பட் டுள்ளது. (ஐ)



# 60 லீற்றர் கசிப்பு, கோடாவுடன் நவாலியில் ஒருவர் கைதானார்!

யாழ்ப்பாணம், மே. 05

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நவாலிப் பகுதியில் வைத்து 185 லீற்றர் கோடா, 60 லீற்றர் கசிப்பு மற்றும் கசிப்பு காய்ச்சும் உபகரணங்கள் என்பவற்றுடன் ஆனைக்கோட்டையை சேர்ந்த சந்தேகநபர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டார்.

மானிப்பாய் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையிலேயே குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

மேலதிக விசாரணைகளின் பின்னர், கைது செய்யப்பட்ட சந்தேக நபரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாக மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். (அ)




# தெல்லிப்பளை மக்களுக்கு இடர்கால உலர் உணவுப் பொருட்கள் வழங்கல்

யாழ்ப்பாணம், மே. 05

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில் வலிகாமம் வடக்கு தெல்லிப்பளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மீள்குடியேற்றம் செய்யப்பட்டு வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மற்றும் பெண் தலைமைத்துவத்தை கொண்ட குடும்பங்களுக்கான இடர் கால உலர் உணவுப் பொதிகள் நேற்றுமுன்தினம் மாலை வழங்கப்பட்டன.

பலாலி, மயிலிட்டி, ஊறணி, தையிட்டி போன்ற பகுதிகளில் அங்குள்ள கிராம சேவையாளர்களினால் தெரிவு செய்யப்பட்ட 260 குடும்பங்களுக்கு தலா 3350 ரூபா பெறுமதியான அத்தியாவசிய உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணியாளர்களும் குறித்த பகுதிகளின் கிராம சேவையாளர்களும், அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். (அ)

# இலங்கையின் சமஷ்டித் தீர்வுக்கு தமிழக முதல்வர் உதவவேண்டும்

## சபையில் கஜேந்திரன் எம்.பி. கோரிக்கை

கொழும்பு, மே. 05

"இலங்கைக்கு நிவாரணத்தை வழங்கும் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், இலங்கையில் ஒற்றையாட்சி ஒழிக்கப்பட்டு தமிழ் தேசம் அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டி தீர்வு ஏற்பட உதவியளிக்க வேண்டும்."

-இவ்வாறு நேற்று பாராளுமன்றில் கோரிக்கை விடுத்தார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-



இலங்கை இன்று வரலாற்றில் என்றும் இல்லாதவாறு வீழ்ச்சியடைந்துள்ளது. இதன் காரணமாக மக்கள் பாரிய பிரச்னைகளுக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்தநிலையில் 74 வருட அனுபவத்தைக் கொண்டு அரசியல் மற்றும் பொருளாதார பிரச்னையை தீர்த்து வைப்பதற்கான எநத முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை.

போரின் பின்னர் 13 வருடக் காலத்தில்கூட வடக்கு-கிழக்கு கடல் ரீதியான பொருளாதாரம் அனைத்து அரசாங்கங்களினாலும் திட்டமிட்டு ஒடுக்கப்பட்டுள்ளது.

19ஆவது திருத்தம் மீண்டும் கொண்டு வரப்படவேண்டும் என்று கூறப்படுகின்ற நிலையில் அது நடைமுறையில் இருந்த போதும் பல கோடி ரூபாய்கள் கொள்ளையிடப்பட்டன.

இனவாதத்தை இந்த நாடு என்று கைவிடுகிறதோ அன்றே நாட்டுக்கு விடிவுக்கிடைக்கும்.

எதிர்க்கட்சியின் சார்பில் உரையாற்றியவர்கள் சர்வதேச நன்கொடையாளர்களின் மாநாட்டை நடத்த கோரிய போதும், புலம்பெயர்ந்த தமிழர்களின் உதவியை பெற்றுக் கொள்வதில் பின்னிற்கிறார்கள்- என்றார். (அ)

# மறுக்கிறார் மைத்திரி!

கொழும்பு, மே 05

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனக்கும் தனது குடும்பத்தினருக்கும் எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு பதிலளித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தனிப்பட்ட செயலாளர் சமீர டி சில்வாவினால் இந்தக் கடிதம் வெளியிடப்பட்டுள்ள நிலையில், முன்னாள் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ முகநூல் பக்கத்திலும் பதிவிடப்பட்டுள்ளது.

மத்திய வங்கியின் பிணைமுறி மோசடியில் கொள்ளையிடப்பட்ட பணத்தில் ஒரு பகுதி முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் அவரது குடும்பத்தினருக்கு பகிர்ந்தளிக்கப்பட்டதாக ஊழல் ஒழிப்புக் குரலின் ஏற்பாட்டாளர் வசந்த சமரசிங்கவினால் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டை வன்மையாகக் கண்டிப்பதாக அதில் கூறப்பட்டுள்ளது.

அரசியல் ஆதாயத்திற்காக அப்பாவி நபர்கள் மீது ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை சுமத்துவது தார்மீக அரசியல் செயல் அல்ல என்றும் அதில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந்த தீங்கிழைக்கும் கருத்து குறித்து எதிர்காலத்தில் அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் எனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# அலி சப்ரி கூறியதையே நானும் கூறினேன் அதற்கு மஹிந்த செவிமடுக்கவேயில்லை!

## ஹர்ஷ டி சில்வா தெரிவிப்பு

கொழும்பு, மே. 05

2020ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட விவாதத்தின் போது எதிர்க்கட்சிகளின் பதில் உரையின்போது அமைச்சர் அலி சப்ரி இன்று கூறியதையே தானும் கூறியதாக பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

நிதியமைச்சர் அலி சப்ரி நேற்றைய பாராளுமன்ற அமர்வின் தொடக்கத்தில் விசேட உரையாற்றினார்.

இதன்போது, சர்வதேச நாணய நிதியத்திற்கு முன்னதாகவே சென்றிருக்கவேண்டும் என்றும் இது ஒரு வரலாற்றுத் தவறு என்றும் கூறினார். அத்தோடு, வரி குறைப்பும் பாரிய தவறு எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிலையில், நிதி அமைச்சர் தெரிவித்த கருத்துக்கு பதிலளித்து உரையாற்றிய போதே அலி சப்ரி கூறியதையே 2020ஆம் ஆண்டு தானும் கூறியதாக ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

எவ்வாறாயினும், அப்போதைய நிதி அமைச்சரும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ தனது பேச்சை எந்த வகையிலும் செவிமடுக்கவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

எவ்வாறாயினும், இழைக்கப்பட்ட தவறுகளை பணிவுடன் ஏற்றுக்கொண்ட அமைச்சர் அலி சப்ரிக்கு நன்றி தெரிவிப்பதாகவும் அவர் கூறினார். (அ)


# மரண அறிவித்தல்

தோற்றம்
08 - 03 - 1939



மறைவு
03 - 05 - 2022

## கணபதிப்பிள்ளை இரவீந்திரன்

(ஓய்வு நிலை இலங்கை வங்கி முகாமையாளர், சர்வதேச பிரிவு, கொழும்பு)

கொழும்பு, கொட்டாஞ்சேனை, ஶ்ரீ சிவானந்த வீதியை சேர்ந்த கணபதிப்பிள்ளை இரவீந்திரன் அவர்கள் 03.05.2022 அன்று மட்டக்களப்பில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் வல்வெட்டித்துறையைசேர்ந்த காலஞ்சென்ற திரு. திருமதி கணபதிப்பிள்ளை - பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும், தொண்டைமானாற்றைச் சேர்ந்த காலஞ்சென்ற துரைராஜா - இரத்தினாம்பாள் தம்பதிகளின் அன்பு மருமகனும், இ. துரைரெத்தினவதியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற சத்தியமூர்த்தி, காலஞ்சென்ற நவசோதி, கனகேஸ்வரன், வசந்தகுமாரன், ஈஸ்வரி ஆகியோரின் அன்பு சகோதரனும், ஜில், ரூபராணி, றம்லின் மற்றும் காலஞ்சென்ற சுகிர்தவதி, லலிதவதி, மானவதி, ரூபவதி, சண்முகபாலன், சண்முகவரதன், கிருபாவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் 05.05.2022 அன்று வியாழக்கிழமை பி.ப 4.00 மணிக்கு மட்டக்களப்பு, நாவற்குடாவில் உள்ள அவரின் உறவினர் வீட்டில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக மட்டக்களப்பு, கள்ளியங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

29, ஶ்ரீசிவானந்த வீதி,
கொட்டாஞ்சேனை,
கொழும்பு - 13

310, பழைய கல்முனை வீதி,
நாவற்குடா, மட்டக்களப்பு.

தகவல்:
**குடும்பத்தினர்.**
0777733325

## ஜனாதிபதி,...

வலியுறுத்தினார்.

நேற்று பாராளுமன்ற அமர்வில் உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஜனாதிபதிக்கு எதிரானதும் மற்றும் பிரதமர் தலைமையிலான அரசுக்கு எதிரானதுமான நம்பிக்கையில்லா பிரேரணைகள் உடனடியாக வாக்கெடுப்புக்கு வரவேண்டும். புதிய பிரதி சபாநாயகரை உடனடியாக நியமிக்க சபாநாயகர் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

நியாயமான வரிக் கொள்கை பற்றி எனக் கூறும்போது கைதட்டுபவர்கள், இந்த அரசு ஆட்சிக்கு வந்தவுடன் கொண்டு வந்த கோடீஸ்வரர்களுக்கு வரிச்சலுகை வழங்கும்போதும் கைதட்டுவார்கள்.

கோடிக்கணக்கான டொலரை நாட்டுக்கு இழக்கச் செய்த பண்டோரா திருடர்களிடமிருந்து உடனடியாகப் பணத்தை மீட்குமாறு கோரிக்கை விடுக்கின்றோம். நலன்புரித் திட்டங்களை அரசு கொள்ளையடிக்கக்கூடாது. சர்வதேச நன்கொடை மாநாடொன்றை விரைவில் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2015ஆம் ஆண்டு அரச ஊழியர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் சம்பள அதிகரிப்பு வழங்கியது தவறு என அரசு கூறுவதைக் கண்டிக்கின்றோம். சம்பள உயர்வால் அரசுக்கு வருமானம் இழக்காது.

அரசாங்கத்தின் 30 மாத கால தாமதச் செயல்பாடுகளாலேயே நாடு இன்று வீழ்ச்சியடைந்துள்ளது. இன்றாவது உலக நாடுகளுடன் கொடுக்கல் - வாங்கல்களை முன்னெடுக்குமாறு அரசைக் கோருகின்றோம்.

பிரச்னை நீடித்தால் லெபனானுக்கு ஏற்பட்ட நிலைமையே இலங்கைக்கு ஏற்படும் என நிதி அமைச்சர் குறிப்பிட்டிருந்தார். 'ஏற்படும்' என்பது அல்ல, அந்நிலைமை ஏற்பட்டுவிட்டது. அதற்கு அரசாங்கம்தான் பொறுப்புக்கூற வேண்டும். தலைக்கு மேல் வெள்ளம் வந்த பிறகு, அணை கட்டுவது குறித்து சிந்திப்பதில் பயனில்லை.

ஜனாதிபதி பதவி விலக வேண்டும் பிரதமர் வீடு செல்ல வேண்டும். மக்களின் கோரிக்கை இதுவே. அதற்காகவே நாம் நம்பிக்கையில்லாப் பிரேரணைகளை முன்வைத்துள்ளோம்" - என்றார். (ஐ)

## யாழில்...

இதில், இருவர் படுகாயமடைந்தனர். படுகாயமடைந்த இருவரும், வீட்டின் முன்பாக மோட்டார் சைக்கிள்களில் நின்றவாறு கதைத்துக் கொண்டிருந்தனர். அப்போது, 3 மோட்டார் சைக்கிள்களில் வந்த 6 பேர் கும்பல் அவர்களை வெட்டிக் காயப்படுத்தியதுடன் மோட்டார் சைக்கிளையும் சேதப்படுத்திவிட்டு தப்பிச் சென்றதாகக் கூறப்படுகின்றது.

கல்வியங்காடு செங்குந்தா மைதானம் தொடர்பான பிணக்கே இந்த வாள்வெட்டுக்கு பின்னணியாக இருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு உடனடியாகத் தகவல் அளிக்கப்பட்டபோதும், சில மணி நேரம் கழித்தே பொலிஸார் அப்பகுதிக்கு வந்தனர் என்றும் அப்பகுதியினர் குற்றஞ்சாட்டியுள்ளனர். (ஐ-3)

## மைனா...

நீதிமன்றி தடையை அடுத்து, போராட்டத்துக்கென அமைக்கப்பட்ட தற்காலிக கூடாரங்கள், பதாகைககளை அகற்றுமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. இதனால் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் பெரும் வாக்குவாதங்கள் இடம்பெற்றிருந்தன.

இந்த நிலையில் நேற்று மாலை இந்த தற்காலிக கூடாரங்கள் அகற்றப்பட்டன. இதையடுத்து போராட்டத்தில் ஈடுபட்டவர்களும் அங்கிருந்து சென்றனர்.

இதேவேளை போராட்டத்தை தடுக்கும் வகையில் அங்க நிறுத்தப்பட்டிருந்த பொலிஸாரின் பஸ்கள் மற்றும் வாகனங்களும் அகற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அழுத்தங்களுக்கு...

நேற்றைய தினம், பாராளுமன்றில் அறிக்கை ஒன்றை சமர்ப்பித்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகுவார் என்று முன்னதாக தகவல்கள் வெளியாகியிருந்தன. ஆனால், பிரதமர் மற்றும் ஜனாதிபதிக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையால் பிரதமரின் பதவி விலகல் திட்டம் மாற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதனிடையே நேற்று பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் உரையாற்றிய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ "நாட்டின் பொருளாதார மற்றும் சமூக கட்டமைப்பில் தோற்றம் பெற்றுள்ள அடிப்படை பிரச்னைகள் மற்றும் முன்னெடுக்கப்பட்டுள்ள தீர்மானங்கள் தொடர்பில் பாராளுமன்றத்துக்கு விளக்கமளிக்கப்படும். பதவியிலிருந்து விலக அரசமைப்பையும் பாராளுமன்றத்தையும் நாட்டையும் அராஜக நிலைக்கு தள்ளத் தயாரில்லை, என்று கூறினார்.

இதனிடையே, பிரதமர் தனது நிலைப்பாட்டை மாற்றி பதவி விலகத் தயாரில்லை என்று ஆளும் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் அமைப்பாளரும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன ஊடகங்களுக்கு தெரிவித்தார். (ஐ)

## அனைத்து...

ஜனநாயகத்திற்கு அடிப்படையானது என்று அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

அத்துடன், "கைதுக்கு அஞ்சாமல் அமைதியான போராட்டத்தில் ஈடுபடும் சுதந்திரம் ஜனநாயகத்தின் அடிப்படை. அமெரிக்கா அனைத்து தரப்பிலும் கட்டுப்பாட்டை வலியுறுத்துகிறது. அமைதியான எதிர்ப்பாளர்களின் உரிமைகளுக்கான எங்கள் ஆதரவை மீண்டும் வலியுறுத்துகிறோம்"என்று பதிவிட்டுள்ளார். (ஐ)

## பாராளுமன்று...

ஞர்கள் சிலர், சபாநாயகரிடம் மனுவொன்றை கையளிப்பதற்கு பாராளுமன்ற வளாகம் சென்றிருந்தனர்.

நேற்று பாராளுமன்ற வளாகத்தில் பலத்த பாது காப்பு போடப்பட்டிருந்தது. அவர்கள் உட் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

பின்னர் சபாநாயகரின் செயலாளர் ஒருவர் சென்று மனுவை பெற்றார். அதன் பின்னர் அங்கிருந்தவர்களை பொலிஸார் அகற்றுவதற்கு முற்பட்டனர். இதனால் பதற்ற நிலை ஏற்பட்டது. பொலிஸாரும், கலகம் அடக்கும் பொலிஸாரும் இணைந்து அவர்களை பஸ்களில் ஏற்றிக் கொண்டுசென்றனர். (அ)

## நாட்டின்...

தற்போதைய நெருக் கடி நிலை இன்னும் இரண்டு வருடங்களுக்கு தொடரலாம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

சர்வதேச நாணய நிதி யத்துடன் ஒரு வேலைத் திட்டத்தில் இணைவ தற்கு மேலும் 6 மாதங்கள் ஆகும் என்று நிதி அமைச் சர் அலி சப்ரி தெரிவித் தார்.

"நான் இரவு காவலாளி வேலை செய்கிறேன். நான் என்ன செய்வது பின் வரிசையில் இருந்து வந்து முன் வரிசையை காக்கிறேன். நான் ஒரு பொருளாதார வல்லுநர் அல்லன். யாராவது பொருளாதார வல்லுநர் இருந்தால் வந்து இதை ஏற்றுக்கொள்ளுங்கள்" என்றும் நிதி அமைச்சர் குறிப்பிட்டார். (அ)




# ஜனாதிபதி செயலகம் முன்பாக நீதிவேண்டி ஊடகர் போராட்டம்!

கொழும்பு, மே 05

சர்வதேச ஊடக சுதந்திர தினமான நேற்றுமுன்தினம் கொழும்பில் ஊடகவியலாளர்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட, கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட மற்றும் கடத்தப்பட்டுத் தாக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி வேண்டியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர் சங்கம், இலங்கை இளம் ஊடகவியலாளர் சங்கம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் நடைபெற்றது.

கொழும்பு - காலிமுகத்திடலில் அமைக்கப்பட்டுள்ள முன்னாள் பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டீ. பண்டாரநாயக்கவின் சிலைக்கு முன்பாக ஒன்றுகூடிய இளம், சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் பேரணியாக ஜனாதிபதி செயலகம் வரை சென்றனர்.

அவர்கள், ஜனாதிபதி செயலகம் முன் நீதி வேண்டிக் கோஷங்களை எழுப்பிக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டத்தில் மதகுருமார்கள், சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஐ)

# மகாநாயக்கர்களின் கோரிக்கையை தலைவர்கள் நிராகரிப்பது நல்லதல்ல!

## கர்தினால் மல்கம் ரஞ்சித் எச்சரிக்கை



கொழும்பு, மே 05

மக்கள் பிரச்னைகளுக்குத் தீர்வு பெற்றுக்கொடுப்பது தலைவர்களின் பொறுப்பு என்று பரிசுத்த பாப்பரசரை சந்தித்து நாடு திரும்பியுள்ள கொழும்பு பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

அத்துடன், மகாநாயக்க தேரர்கள் கூறும் விடயத்தை நிராகரிப்பது நல்லதல்ல எனவும் அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற நாட்டுத் தலைவர்கள் முன்வர வேண்டும்.

நாட்டு மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதால், சரியானவற்றை செய்து பிரச்னைகளுக்கு தீர்வைப் பெற்றுக்கொடுப்பது தலைவர்களின் கடமை. ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் ஏற்றவாறு சட்டங்கள் உருவாக்கப்படுவது கவலைக்குரியது. சட்டம் அவர்களுக்கு மேலாக இருக்க வேண்டும்" என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# நாளை கடையடைப்பு போராட்டம்! வவுனியா மாவட்டம் பூரண ஆதரவு

வவுனியா, மே 05

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார பிரச்னை மற்றும் அரசுக்கு எதிராக எதிர்வரும் 6ஆம் திகதி வவுனியாவில் பூரண கடையடைப்பை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் நேற்று இணைந்த தொழில்சங்கத்தின் ஏற்பாட்டில் தொழில்சங்கங்கள், பொது அமைப்புக்கள் கூடி எடுத்த தீர்மானத்தின்படி பிரகாரம் 6ஆம் திகதி அனைத்து கடைகள் மூடப்படும். பேருந்துகள் சேவையில் ஈடுபடாது இருக்கவும், முச்சக்கரவண்டிகள் சேவையில் ஈடுபடாமல் இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அரச திணைக்களங்கள், வங்கிகள், பல்கலைக்கழகம், ஆசிரியர் சங்கங்கள் தமது கடமையில் இருந்து விலகியிருக்கவும் தீர்மானித்துள்ளனர். இதேவேளை, 6ஆம் திகதி அரசாங்கத்துக்கு எதிராக பாரிய ஆர்ப்பாட்டமொன்றையும் நடத்த முடிவெடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## திடீர் காய்ச்சல்...

குழந்தை ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக மருத்துவ அறிக்கையிடப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலைதிடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் இறப்பு விசாரணையை மேற்கொண்டார். (அ-03)

## பிரதி...

கான வாக்களிப்பு இன்று வியாழக்கிழமை நடைபெறும் என்றும் அறிவித்தார்.

நெருக்கடிக்கு மத்தியில் வாக்கெடுப்பு இடம்பெறுவதால், எந்த அணிக்கு பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இருக்கின்றது என்பதை இன்று அறிந்துகொள்ள முடியும். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# தமிழக முதல்வர் ஸ்டாலின் இலங்கைக்கு வரவேண்டும்

## மனோ கணேசன் அழைப்பு



கொழும்பு, மே 05

தமிழக முதல்வர் இலங்கைக்கு வழங்கவுள்ள நிவாரண உதவிகள், இலங்கைக்கும் தமிழகத்துக்கும் இடையிலான உறவுக்கு வழிவகுக்கும் என்று பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றிய மனோ கணேசன், தமிழக முதல்வரின் நிவாரணத்தை தாம் வரவேற்பதாகவும் குறிப்பிட்டார்.

இதேவேளை, இந்திய வம்சாவளிகள் இலங்கைக்கு அழைத்து வரப்பட்ட 200 ஆவது வருட நிறைவை முன்னிட்டு தமது கட்சி ஒழுங்கு செய்துள்ள நிகழ்வுக்கு தமிழக முதல்வரை அழைப்பதற்குத் தாம் தயாராகி வருவதாகவும் மனோ கணேசன் கூறினார். (அ)

# மண்சரிவு அபாயமுள்ள வலயங்களில் 7000 பேர்!

கொழும்பு, மே 05

மண்சரிவு அபாயம் காணப் படும் பகுதிகளில் வசித்து வரும் 7,000 இற்கும் மேற்பட்ட குடும்பங்களை பாதுகாப்பான இடங்களில் மீளக் குடியமர்த்தும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதாக தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் பருவ மழையை கருத்திற்கொண்டு மண்சரிவு அபாயம் உள்ள பகுதிகளில் வசிக்கும் மக்கள், மிகவும் அவதானமாக இருக்க வேண்டு மென நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம், பேராசிரியர் ஆசிரி கருணாவர்தன தெரிவித்தார்.

இதனிடையே, மண்சரிவு ஏற்படும் அபாயம் காணப்படும் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு பலத்த மழையுடனான வானிலை தொடர்பில் தெளிவுபடுத்துவதற்காக முறையான வேலைத் திட்டமொன்று முன்னெடுக்கப்படுவதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# கறுப்புச் சந்தையில் எரிவாயு விற்பனை

கொழும்பு, மே. 05

சந்தையில் கொள்வனவு செய்ய போதிய தொகை எரிவாயு கொள்கலன்கள் இல்லாத போதிலும் கறுப்புச் சந்தையில் 10 ஆயிரம் முதல் 12 ஆயிரம் ரூபாவுக்கு எரிவாயு கொள்கலன் விற்பனை செய்யப்பட்டு வருவதாக நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக சமையல் எரிவாயு கொள்கலன்களை விற்பனை செய்யும் வர்த்தகர்கள், தொகையை மறைத்து வைத்து இடைத்தரகர்கள் ஊடாக அதிக விலைக்கு எரிவாயுவை விற்பனை செய்து வருகின்றனர்.

இதனை தவிர மேலும் சில தரப்பினர் திட்டமிட்டு எரிவாயு வரிசைகளில் நின்று எரிவாயுவை கொள்வனவு செய்து, அவற்றை 4 ஆயிரம் ரூபா இலாபத்துடன் வெளியில் விற்பனை செய்து வருவதாகவும் நுகர்வோர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

சில எரிவாயு விற்பனை முகவர்கள் எரிவாயு தட்டுப்பாட்டுடன் எரிவாயு சர்வாதிகாரத்தை கையில் எடுத்து விற்பனைகளில் ஈடுபட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

நுகர்வோர் அதிகார சபை உட்பட பொறுப்புக் கூறவேண்டிய தரப்பினர் தலையீடுகளை மேற்கொண்டு இந்த அநீதியான செயலை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் நுகர்வோர் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)




# உலக ஊடக சுதந்திர தரப்படுத்தலில் 19 இடங்கள் பின்தங்கியது இலங்கை!

கொழும்பு, மே 05

2022ஆம் ஆண்டுக்கான உலக ஊடக சுதந்திர சுட்டியில், இலங்கை 19 இடங்கள் பின்னோக்கி தரப்படுத்தப்பட்டுள்ளது.

எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பு, 2022ஆம் ஆண்டுக்கான உலக ஊடக சுந்திர சுட்டியை வெளியிட்டுள்ளது.

180 நாடுகளைக் கொண்ட இந்தப் பட்டியலில், கடந்த ஆண்டு 127ஆவது இடத்தில் இலங்கை தரப்படுத்தப்படுத்தப்பட்டிருந்தது.

இந்த நிலையில், இந்த ஆண்டு 146 ஆவது இடத்தில் இலங்கை தரப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு 142 ஆவது இடத்தில் பதிவாகியிருந்த இந்தியா, இந்த ஆண்டு 150 ஆவது இடத்தில் பதிவாகியுள்ளது.

முதலாம் இடத்தில், நோர்வேயும், இரண்டாம் இடத்தில் டென்மார்க்கும் பதிவாகியுள்ளன.

சுவீடன், எஸ்தோனியா, பின்லாந்து முதலான நாடுகள் முறையே அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.

இச்சுட்டியில், பிரித்தானியா 24 ஆவது இடத்திலும், அமெரிக்க 42 ஆவது இடத்திலும், ரஷ்யா 155ஆவது இடத்திலும், பாகிஸ்தான் 157 ஆவது இடத்திலும், சீனா 175 ஆவது இடத்திலும் பதிவாகியுள்ளன. (அ)

# சரிவில் இருந்து நாடு மீள்வதற்கு வரிகளை அதிகரிக்க வேண்டும்

## பாராளுமன்றில் ரணில் வலியுறுத்து

கொழும்பு, மே. 05

நாடு தற்போதைய சூழ்நிலையில் இருந்து மீள்வதற்கு சில சந்தர்ப்பங்களில் வரிகளை அதிகரிக்கவேண்டியிருக்கும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நிதி அமைச்சரே, அவரரவருக்கு விருப்பப்படி செய்ய இடமளிக்க வேண்டாம். சிறீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனம் தற்போது 25 ஏர்பஸ்களை வாங்கியுள்ளது. நாம் இலங்கையின் பொருளாதாரத்தை பார்த்துவிட்டு அதன் பின்னர் பொருளாதாரத்துக்கு என்ன செய்வது என்று பார்க்கவேண்டும்.

குறிப்பாக, பாராளுமன்றத்தின் அங்கீகாரம் கிடைக்கும் வரையில் எந்தவொரு விமானத்தையும் வாங்க வேண்டாம் என சிறீலங்கனுக்கு தயவு செய்து தெரிவிக்குமாறு நிதி அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன்.

நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களை என்ன செய்வது? உலக சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயர்ந்து வருகிறது.

2020 - 2021ல் எண்ணெய் விலை குறையும்போது தனி நிதியம் அமைக்கப்படும் என்று அப்போது எமக்கு கூறினர்.

அந்த நிதியத்தில் பணம் இருக்கிறதா? இல்லையென்றால் அந்த அதிகாரிகளை தண்டிக்கவேண்டும். அதனால்தான் நாம் உங்களிடம் கேட்கிறோம். என்ன செய்வது என்று?

நீங்கள் சொன்னதை விட இன்னும் மேலும் பல நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்-என்றார். (அ)

# இலங்கை எதிராகச் செயற்பட்டபோதும் இந்தியாவே இப்போது உதவியளிக்கிறது

## சபையில் சுட்டிக்காட்டியது கூட்டமைப்பு

கொழும்பு, மே. 05

இந்தியாவுக்கு எதிராக இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் செயற்பட்டபோதும் இன்று இந்தியாவே இலங்கைக்கு உதவி வருவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இனப்பிரச்னைக்கு தீர்வை காணாது விட்டால், தொடர்ந்தும் பாதுகாப்புக்காக அதிக செலவீனங்களை மேற்கொள்ளவேண்டியிருக்கும்.

இந்தநிலையில் போருக்காக நாட்டின் வளங்களை செலவிட்ட அரசாங்கங்கள் இன்றும் பாதுகாப்புக்கு அதிக நிதியை ஒதுக்கீடு செய்து வருகிறது.

கடந்த காலங்களிலும் சிங்கள அரசாங்கங்கள் தமிழர்களை ஏமாற்றின-என்றார். (அ)

# மருந்துகள் இல்லையா? 1999இற்கு அழையுங்கள்!

கொழும்பு, மே 05

மருந்துப் பொருட்களை பெற்றுக் கொள்வதில் சிக்கல் ஏற்பட்டால் உதவுவதற்காக, 1999 சுவசெரிய சேவை இலக்கம் மூலம் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர், பேராசிரியர் சன்ன ஜயசுமண தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சு ஊடாக இதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்று அவர் கூறியுள்ளார்.

நோயாளி ஒருவருக்கு ஏதேனுமொரு மருந்தைப் பெற்றுக்கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்படுமாயின், 1999 என்ற துரித தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி உதவிகளை பெற் றுக்கொள்ள முடியுமென சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இதன்பின்னர் குறித்த நோயாளிக்கு தேவையான மருந்துகளை எங்கிருந்து பெற்றுக்கொள்வது மற்றும் அவற்றை இலகுவாக பெற்றுக்கொள்ளும் முறை என்பன தொடர்பில் உரிய தொலைபேசி இலக்கத்துக்கு அறிவுறுத்தப்படும் என அவர் கூறியுள்ளார்.

இந்த சேவையை 24 மணித்தியாலங்களும் செயல்படுத்தும் வகையில் சுகா தார அமைச்சின் மருத்துவ விநியோகப் பிரிவு ஒருங்கிணைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# எம்.பிக்கள் பாதுகாப்புக்காகவே ஆர்ப்பாட்டக்காரர்கள் கைதாம்!

கொழும்பு, மே. 05

பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பை கருத்திற்கொண்டே நேற்று சிலர் கைதுசெய்யப்பட்டதாக பொதுமக்கள் பாதுகாப்பு துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தின்போது பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு தொடர்பில் சபாநாயகரால் பொலிஸ் அதிபரின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது.

இந்த நிலையில் நேற்று பாராளுமன்றத்துக்கு முன்னால் போராட்டத்தில் ஈடுபட்ட சிலர், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தியதன் காரணமாகவே அவர்கள் கைது செய்யப்பட்டதாக பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

இந்தநிலை தொடருமானால், பாராளுமன்ற அமர்வுகளை நடத்திச்செல்ல முடியாத நிலை ஏற்படும் என்றும் பிரசன்ன ரணதுங்க எச்சரிக்கை விடுத்தார். (அ)




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 05.05.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து வழங்குபவர் உளவள துனையாளர் திரு.நா.நவராஜ்
7.15 மணி : கதைவழி அறமொழி-ஜோன்சன் ராஜ்குமார் ஆசிரிய ஆலோசகர்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ - மறுஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : நலம்தானா-மறுஒளிபரப்பு
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-இஞ்சி இடுப்பழகி, நண்பேன்டா திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : வெள்ளித்திரை

**இரவு**
7.00 மணி : சமையல் சமையல்



7.30 மணி : வெள்ளிடை நுட்பம்-தொழில்நுட்பம் பயன்பாடுபற்றிய நிகழ்ச்சி
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : கச்சேரி ஆரம்பம்



10.00 மணி : நேருக்கு நேர்-அரசியல் நிகழ்ச்சி

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் நிவி

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு